பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 29, சனிக்கிழமை 11.02.2017 கதிர் 98

# கிழக்கு 'எழுக தமிழில்' ஜனசமுத்திரம்



*- மட்டக்களப்பில் இருந்து 'காலைக்கதிர்' செய்தியாளர் எஸ்.நிதர்சன் -*

தமிழ்மக்கள்பேரவையால்ஏற்பாடு செய்யப்பட்ட 'கிழக்கு எழுக தமிழ்' எழுச்சி நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்தஎழுச்சிநிகழ்வில்கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்புமற்றும்அம்பாறைபோன்றமாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்குஅருகில்நேற்றுக்காலை 9 மணிக்கு'எழுகதமிழ்'எழுச்சிப் பேரணி ஆரம்பமானது. தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில்ஒருவரும்வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் பேரணியை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பத்தில் மக்கள் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்ட போதிலும் பேரணி தொடங்

பக்கம் 19 >>>

# சமஷ்டி முறையில் சுயாட்சி!

## 'எழுக தமிழ்' பிரகடனம்

**மட்டக்களப்பு, பெப்ரவரி 11**

**நேற்றுப் பகல் மட்டக்களப்பு நகரில் 'எழுக தமிழ்' பேரணியில்திரண்டதமிழ்மக்கள், இணைந்ததமிழர் தாயகத்துக்குசமஷ்டிஅடிப்படையில்சுயாட்சிவழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அந்தப் பேரணியில் பிரகடனமாக வெளியிட்டனர்.**

**'எழுகதமிழ்'பேரணியின் முடிவில்இந்தப்பிரகடனம் வெளியிடப்பட்டது.**

அந்தப் பிரகடனத்தின் முழு விவரம் வருமாறு:-

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் நாள், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு நகரில் முன்னெடுக்கப்படும்'எழுகதமிழ்' பேரணியானது, தமிழ் மக்கள்

பக்கம் 19 >>>

# புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழிக்க அமெ. துப்பு தந்தது!

## முன்னாள் கடற்படைத் தளபதி தகவல்

கொழும்பு, பெப்.11

யுத்த சமயத்தில் புலிகளின் ஆயுதக் கப்பல்களை ஆழ்கடலில்அடையாளம் கண்டு, அழிப்பதற்கானமிகமுக்கியமான உள

பக்கம் 02 >>>

# தமிழருக்கு மாற்று அரசியல் தலைமை தேவை என்பது போலவே தோன்றுகிறது!

## *மேசையைத் தட்டியபடி முதல்வர் விக்கி சுவாரஸியப் பதில்*

மட்டக்களப்பு, பெப்.11

"தமிழருக்கு மாற்று அரசியல் தலைமை ஒன்று தேவைப்படுகின்றது என்பது போலத்தான் எனக்குப்படுகின்றது."

–இவ்வாறு மேசைகளில் மேளம் தட்டியபடி–சிரித்தவாறு –சுவாரஸியமாகப்பதில்தந்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர்சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்றிரவு மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்தச் செய்தியாளர் சந்திப்பின்போது, நிருபர் ஒருவர் கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

"யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட்ட 'எழுக தமிழ்'நிகழ்வில்பல்லாயிரம்மக்கள் திரண்டிருக்கின்றனர். இது தமிழர்களுக்கு மாற்று அரசியல் தலைமை ஒன்று அவசியம்

பக்கம் 02 >>>

அளப்பு அருணாசலம்



உவர் பெரியவர் 'வரும்... ஆனா வராது...' எண்ட மாதிரியெல்லோ கதை விடுறார்...!

# போராட்டங்கள் தொடர்கின்றன

## புதுக்குடியிருப்பில்!

புதுக்குடியிருப்பு, பெப்.11

புதுக்குடியிருப்பு நகரில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள படை முகாமை அகற்றி காணிகளை தங்களிடம் மீளக் கையளிக்க வலியுறுத்தி புதுக்குடியிருப்பு மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம்நேற்று 8 ஆவதுநாளாகவும் தொடர்ந்தது.

19 குடும்பங்களுக்குசொந்தமான காணிகள் அங்கு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. (ம-81)

## கேப்பாபிலவில்!

முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நேற்று 11 ஆவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.

அவர்களின் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், நேற்று இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்கம், முல்லைத்தீவு மாவட்டஅனைத்துப்பல்கலைக் கழகமாணவர்ஒன்றியத்தினர்ஆகியோர்நேரில்சென்றுதமது ஆதரவைவெளிப்படுத்தினர். (ம-81)

# வன்னியிலும் பன்றிக் காய்ச்சல்; மூன்று பேர் இனங்காணப்பட்டனர்

## *மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்தல்*

கிளிநொச்சி, பெப்.11

வன்னியில் பன்றிக் காய்ச்சல் நோய்த் தாக்கத்துடன் மூன்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அதனால் மக்கள்அனைவரையும்அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

பக்கம் 02 >>>

தேர்தல் முறையில் மாற்றங்கள்

ஆறுதல் நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற கருத்தூன்றல் களத்தில் ஒன்பதாவது கலந்துரையாடல் தேர்தல்முறையில் மாற்றங்கள் என்ற தொனிப் பொருளில்நடைபெறவுள்ளது.

**இடம்**:- ஆறுதல் நிறுவனம்.
இல.51, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**காலம்**:- 12.02.2017
(ஞாயிற்றுக்கிழமை) மு.ப.10மணி

அனைவரையும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு
021 221 7092




நேற்று மட்டு நகரில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வின் காட்சிகள்...

## டெங்கு அதிகமுள்ள மாவட்டமாக யாழ்ப்பாணம்

நாட்டில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ள 9 மாவட்டங்களில் யாழ். மாவட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, காலி, மாத்தறைமற்றும்இரத்தினபுரிஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 9 ஆயிரத்து886டெங்குநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 12பேர்உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, 102 பாடசாலைகள் டெங்கு தொற்று பரவும் இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## காணி மீட்கும் போராட்டத்துக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு மக்களின் நில மீட்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர்ஆசிரியர்சங்கம்ஆதரவு தெரிவித்து அவர்களது போராட்டத்தில்நேற்றுக்கலந்துகொண்டது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது நிலங்களை விடுவிக்கக் கோரிகேப்பாப்பிலவுமக்களும், புதுக்குடியிருப்புமக்களும்முல்லைத்தீவில் வெவ்வேறு இடங்களில் ஆரம்பித்துள்ள தொடர் போராட்டங்களில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தாய்ச் சங்கப் பிரதிநிதிகளும், முல்லைத்தீவுமாவட்டதலைவர், செயலாளர், வலயச்செயலாளர் உள்ளிட்டஅதிபர்கள், ஆசிரியர்களும் நேற்று இணைந்து ஆதரவு தெரிவித்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்குச் சுழற்சிமுறையில்அதிபர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதோடு மக்களின்வாழ்விடங்கள்விடுவிக்கப்படாத விடத்து ஒட்டு மொத்தமாக அதிபர்கள், ஆசிரியர்களோடு மாணவர்களையும் இணைத்து போராடுவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடி வெடுத்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோரது குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## யுவதியைக் கர்ப்பவதியாக்கிய படைச் சிப்பாய் சிக்கினார்

### கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் சம்பவம்

கிளிநொச்சி –ஊற்றுப்புலத்தில் யுவதி ஒருவரைக் காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி, அவரை கர்ப்பவதியாக்கியவர் எனக்கூறப்படும்படைச்சிப்பாய் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம்இரவு10மணியளவில் இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது.

வன்னியில் பொதுமக்கள் மீள்குடியேறிய பின்னர் கிராமங்களைக் கண்காணிப்பதற்கு நியமிக்கபட்ட படைச் சிப்பாயே இந்தச் செயலில் ஈடுபட்டார் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படிச் சிப்பாய் தொடர்பாக பிரதேச மக்கள் படை உயரதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே அங்கு வந்த படை அதிகாரிகள் பொதுமக்களின் உதவியுடன்அவரைமடக்கிப்பிடித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோரின் இயலாமையைப் பயன்படுத்தியே மேற்படி படைச் சிப்பாய் அந்தப்பெண்ணை அச்சுறுத்தி பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம்செய்தார்எனக்கூறப்படுகின்றது. (ம-70)

## வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இருவரை வழி மறித்த பொலிஸ்



மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு செய்தி சேகரிக்க வந்த வெளிநாட்டு ஊடகவியலாளர் இருவர் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டனர்.

'எழுக தமிழ்' நிகழ்வின் செய்திகளை அவர்கள் சேகரித்துக் கொண்டிருந்த சமயமே அவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறையினரால் மறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

தாங்கள் முறையான அனுமதியுடன் பணிக்கு வந்துள்ளார்கள் என அவர்கள் தெரிவித்தமையை அடுத்து, அவர்களின் ஆவணங்களைப் பரிசோதித்துவிட்டு அவர்களை விட்டு விலகிச் சென்றனர் பொலிஸார்.

## அதிபரும் மகளும் விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிளும் 'படி' ரக வானும் மோதி விபத்துக்குள்ளானதில் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபரும், அவரின் மகளும் படுகாயமடைந்தனர். அவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை நெல்லியடி மாலுசந்தி தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இவ்விபத்தில் கனகேஸ்வரன் கிருஷ்ணகுமார் (வயது - 52), அவரது மகளான கிருஷ்ணகுமார் அபிரா (வயது -20 ) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

நெல்லியடி மத்திய கல்லூரியில்நடைபெறவுள்ள இல்லமெய்வன்மைப் போட்டிக்கான முன்னேற்பாட்டு வேலைகளுக்காகச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-40)

## எழுவைதீவு மின்சக்தி நிலையத்தை மின்வலு அமைச்சர் திறந்துவைத்தார்

### சாவகச்சேரியில் காற்றாலை அலுவலகமும் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

மின்வலு மற்றும் மீள் புதுப்பித்தலுக்கான அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று யாழ்ப்பாணம் வந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

எழுவைதீவில் அமைக்கப்பட்ட, இலங்கையின்முதலாவது ஒன்றிணைந்த மின்சக்திநிலையத்தை அவர் நேற்றுக் காலை அங்குரார்ப்பணம்செய்துவைத்தார். பிரதி அமைச்சர் அஜித் பி பெரேராஉள்ளிட்டோர்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டு வருட காலஆட்சிநிறைவினையொட்டி முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 187 மில்லியன் ரூபா நிதியில் மேற்படிமின்சக்திநிலையம்அமைக்கப்பட்டுள்ளது.

60 கிலோவோட் மின்சார கொள்ளளவைக்கொண்டமேற்படி மின்னுற்பத்தி நிலையம் காற்று, சூரிய சக்தி மற்றும் டீசல் எரிபொருள்ளக் கொண்டு மின்சாரத்தைஉற்பத்திசெய்யும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுன்னாகம் காற்றாலை செயல்திட்டத்தின் சாவகச்சேரிக் கிளை அலுவலகத்தை மின்வலு அமைச்சர் நேற்று மாலை 3 மணிக்கு திறந்து வைத்தார். அமைச்சர் மற் றும், பிரதி அமைச்சர் ஆகியோருடன்நாடாளுமன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-21-22)

## 'சைட்டம்' தொடர்பாக ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

கொழும்பு, பெப்.11

மாலபே 'சைட்டம்' தனியார் மருத்துவக்கல்லூரிதொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர் என அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தச்சந்திப்பு இன்று காலை 9.00 மணிக்கு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் இடம்பெறும் என அச்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர்சமந்தஆனந்ததெரிவித்துள்ளார். (ம)

## முல்லை.தனியார் பஸ் உரிமையாளர் சங்க பொதுக்கூட்டம் நாளை

முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினருடனான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 11மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை. மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 89 உரிமையாளர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அறிவித்துள்ளார். (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுத் தகவல்களை தன்னுடைய உயர்ந்த தொழில்நுட்ப வசதிகள் மூலம் அமெரிக்கா கண்டறிந்து இலங்கைக் கடற்படைக்கு வழங்கியது. அதன் மூலம் புலிகளின் பெரும்பலத்தைசிதறடிக்கமுடிந்தது.

--இவ்வாறு இலங்கைக் கடற்படையின்முன்னாள்தளபதி அட்மிரல் ஜெயந்த் கொலம்பகே தெரிவிக்கின்றார்.

'கடலில் சமச்சீரற்ற யுத்தம்' என்ற தலைப்பில் தாம் எழுதியுள்ள புத்தகத்திலேயே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

புலிகளின் ஆயுதக் கப்பல்களின் நகர்வு பற்றிய விடயங்களை செய்மதிப் படங்களோடு அமெரிக்காதுல்லியமாகத்தந்துதவியது. இந்தத்துப்புகள்கடலில் இலங்கைக் கடற்படைக்கு பெரு வெற்றியைத் தேடித் தந்தமையோடு, இலங்கை இராணுவப் படைக்கு தரையில் வெற்றியையும், விமானப்படைக்கு, நிலத்திலருந்துசுட்டுவீழ்த்தும்தாக்குதல் அபாயம் ஏற்படாமல் இலக்குகளை அழிக்கும் தகைமையையும்தேடித்தந்தன - என்றும் அவர்தமதுநூலில்தெரிவித்துள்ளார். (உ)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; மற்றொருவர் அடித்துக் கொலை!

### குருநாகல், வறக்காப்பொலவில் சம்பவங்கள்

குருநாகல்–நிக்கவரெட்டிய, சிறிசெத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, வறக்காப்பொல எத்னாவல பிரதேசத்தில் இரண்டு கைகளும் கட்டப்பட்டு முகம்மூடப்பட்டுதாக்கிகொலை செய்யப்பட்ட நிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். அந்த நபரின் பயணப்பையில் இருந்த ஆவணங்களின் மூலம் அது பற்றிய தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கொலைசெய்யப்பட்ட பின்னர் அந்த பகுதிக்கு கொண்டு சென்று போடப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ம)

## வன்னியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டகச்சி சம்புக்குளம், முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு றெட்பானா மற்றும் மாங்குளம்பிரதேசத்தில்பெரியகுளம் ஆகிய பிரதேசங்களில் மூன்று சிறுவர்களுக்கு பன்றிக் காய்ச்சல்நோய் இருப்பதுகண்டறியப்பட்டுள்ளது.

எனவே,சளியுடன்காய்ச்சல், தடிமன், தொண்டைப்புண், மூக்குச்சளி, தலையிடி, உடல் நோ, மூச்சுவிட முடியாமை, நெஞ்சு நோ, மறதிக்குணம், நெஞ்சுப் படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் போன்றநோய் அறிகுறிகள் உள்ளவர்கள்உடனடியாக அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வது அவசியம் எனவும் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ம-70)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரிகச்சாய் வீதியில் குப்பைகளை அகற்றிக்கொண்டிருந்த நகர சபையின் உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றவிபத்தில்மோட்டார்சைக்கிளில் பயணித்ததாயும்பிள்ளையும்படுகாயமடைந்தநிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்சிகிச்சைக்காகசேர்க்கப்பட்டுமேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஐ 21)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற எதிர்பார்ப்புடன் அந்த தலைமையைத் தமிழ் மக்கள் தேடுகின்றனர் என்ற செய்தியையேசொல்கின்றது. இதனை மாண்புமிகுமுதலமைச்சர்விளங்கிக்கொள்ளவேண்டும். – என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் இன்று உங்களையும் வைத்துக் கொண்டு 'எழுகதமிழ்' நிகழ்வில் தமது உரையில் குறிப்பிட்டார். அப்படி ஒரு மாற்றுத் தலைமை அவசியம்என்றுநீங்கள் உணர்கின்றீர்களா?" – என்று அந்த நிருபர் கேட்டார்.

அந்தநிருபர்கேட்டதும், தலையைக் குனிந்தவாறு சிரித்துக் கொண்ட முதல்வர், சில செக்கன்கள் மேசையில் மேளம் தட்டியவாறு தலையை இரண்டு பக்கமும் அசைத்தபடி புன்முறுவல் பூத்தார். பின்னர் சடார் என்று "எனக்குத்தெரியவில்லை. ஆனால் அப்படி ஒரு மாற்றுத் தலைமை தேவைபோலத்தான் படுகின்றது." – என்று சுவாரஸியப் பதில் தந்தார் அவர்.

"எழுக தமிழ்ப் பேரணிக்கு வெளிமாவட்டங்களில் இருந்து பஸ்களில் ஆட்கள் ஏற்றிக் கொண்டுவந்து இறக்கினார்கள் என்றுதமிழரசுக்கட்சிக்காரர்கள் குற்றம் சுமத்துகின்றனரே....?"– என்றுஒருகேள்விகேட்கப்பட்டது.

"வெளிமாவட்டங்களில்இருந்து வருவதானால்ஏற்றிக்கொண்டு தானே வரவேண்டும்? நடந்தா வரமுடியும்?" – என்று பதிலடி தந்தார் முதல்வர்.

நேற்று மாலை தமிழ் மக்கள் பேரவையின் உயர்மட்டக் குழு ஒன்று அதன் இணைத் தலைவர்களான முதல்வர் விக்னேஸ்வரன், த.வசந்தராஜா ஆகியோர் தலைமையில் மட்டக்களப்பு ஆயர் வண. பொன்னையா ஜோஸப்பையும் பின்னர் காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழுவையும் சந்தித்து உரையாடியது. (உ)

# கல்வி முறையில் உடனடி மாற்றங்கள் தேவை!

## நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சபையில் கோரிக்கை

கொழும்பு,பெப்.11

இலங்கையில் முறையற்ற முறைமையிலான கல்வித் திட்டமே அமுலில் உள்ளது. இதில் உடனடி மாற்றங்கள் தேவை. அதனை பாலர் பாடசாலையிலிருந்து ஆரம்பித்து பல்கலைக்கழகம் வரை முன்னெடுக்க வேண்டும் என்று நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், 'சைட்டம்' தனியார் பல்கலைக்கழகத்தை எதிர்க்கும் வைத்திய சங்கம் ஏன் தனியார் மருத்துவமனைகளை எதிர்ப்பதில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் கீழ் ஒழுங்குவிதிகள் சட்டம் தொடர்பிலான விவாதத்தில் உரையாற்றும்போதே நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'சைட்டம்' தனியார் பல்கலைக்கழகம் மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு நிதி உதவியும் வழங்கப்பட்டது.

இன்று கட்டடங்கள் நிர்மாணித்து மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அன்று இதனை எதிர்க்காது பூனைகளைப் போல் இருந்த அரச வைத்தியர்கள் சங்கத்தினர் இன்றைய நல்லாட்சியில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 'சைட்டத்துக்கு' எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்க்கும் வைத்தியர்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறார்களா?

கல்வித் துறையில் இலங்கையில் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கான போராட்டங்கள் நடத்தப்படுவதில்லை.

எதற்காக ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறோம் எனத் தெரியாமல் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான விவசாயிகள் மற்றும் கஷ்டப்பட்ட குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளே ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்கின்றனர். உயர்மட்டக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்வதில்லை.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியே காலத்தை வீணாக்கி விடுகின்றார்கள். இறுதியில் அவர்கள் கல்வியில் பின்தங்கி விடுகின்றனர்.

எமது நாட்டின் கல்வி முறைமையே பிழையானது. முறையற்ற வகையில் உள்ளது. எனவே கல்வித்துறையில் மாற்றங்கள் தேவை.

அதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பிப்பதை கைவிட்டு பாலர் பாடசாலையிலிருந்து மாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும். தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என்ற முறையும் மாற்றப்பட வேண்டும். இதனால் மாகாணப் பாடசாலைக்கு அநீதி ஏற்படுகின்றது.- என்றும் தெரிவித்துள்ளார். (க)

## 11 தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள்; சந்தேக நபர்களை கைது செய்யுமாறு உத்தரவு!

கொழும்பு,பெப்.11

2008ஆம் ஆண்டில் 11 தமிழர்கள் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு, கொழும்பு கோட்டே நீதிவான் லங்கா ஜெயரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதிக்கும், செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கும் இடையில், 11 தமிழர்கள் கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டனர்.

இவர்கள் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளை வதிவிடமாகக் கொண்டவர்களாவர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கோட்டே நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது, இந்த வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஒரு மாத கால அவகாசத்தையும் நீதிவான் வழங்கியுள்ளார்.

இந்த வழக்கில் கடற்படை புலனாய்வுப் பிரிவில் இருந்த லெப்.கொமாண்டர் நிலந்த சம்பத் முனசிங்க சந்தேக நபர்களில் ஒருவராக பெயரிடப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலரை புலனாய்வுப் பிரிவு கைது செய்யவுள்ளது. இதற்கே கோட்டே நீதிவான் அனுமதி அளித்துள்ளார்.

## காணாமற்போனோர் பணியகத்தின் அதிகாரத்தைக் குறைக்க திருத்தச்சட்டம்!

கொழும்பு,பெப்.11

காணாமற்போனோர் பணியகச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஐந்து மாதங்களிலேயே அதன் அதிகாரத்தைக் குறைக்கும் திருத்தச்சட்டம் ஒன்றை அரசாங்கம் நிறைவேற்றவுள்ளது.

சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, அரசாங்கம் காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டத்தை கடந்த 2016 ஒகஸ்ட் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.



இந்தச் சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்ற நிலையில், இதில் திருத்தம் ஒன்றைச் செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் 14 ஆவது இலக்க, காணாமற்போனோர் பணியகச் சட்டத்தின் 'அ' பந்தியில், 11 ஆவது பிரிவில் திருத்தம் செய்வதற்கான யோசனையை கடந்த வாரம் அமைச்சரவையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய, காணாமற்போனோருக்கான பணியகம் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு, தனிநபர் அல்லது அமைப்புடன் உடன்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் நீக்கப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இந்த திருத்தம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்படவுள்ளது.

## கோட்டாபயவின் உதவியாளர்களான 2 படை அதிகாரிகளுக்குத் தடை!

### வெளிநாடு செல்வதற்கு முடியாது

கொழும்பு,பெப்.11

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

29 மில்லியன் ரூபா பணத்தைத் துஷ்பிரயோகம் செய்து அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்று இவர்கள் இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில், இந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என கொழும்பு கோட்டே நீதிவான் லங்கா ஜயரட்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்தில் கடமையாற்றி வரும் லக்ஷ்மன் திலக சிறி மற்றும் உபுல் தர்மதாஸ ஆகியோருக்கே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரில் கொன்சியூலர் காரியாலயத்தில் கடமையாற்றியுள்ளனர். இவ்வாறு கடமையாற்ற பாதுகாப்பு அமைச்சினதோ அல்லது இராணுவத்தினதோ அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்தக் காரியாலயத்தில் கடமையாற்றிய போது 29 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு இந்த விசாரணைகளை நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்படும்!

### அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு,பெப்.11

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

'திவிநெகும' திருத்தச் சட்டமூலம், தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபைச் சட்டம் ஆகியவற்றின் கீழான இரண்டு ஏற்பாடுகள் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய போதே அமைச்சர் திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி மலையக பெருந்தோட்டப் பிரதேசங்களில் நிலவும் அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

இதில் 5 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அத்துடன், சகல தனியார் வைத்தியசாலைகளுக்கும் கட்டண கட்டுப்பாடு ஏற்படுத்தப்படவுள்ளது. நியாயமற்ற விதத்தில் கட்டணம் அறவிடும் வைத்தியசாலைகள் பற்றி மக்கள் முறையிட்டுள்ளனர். அவர்களின் முறைப்பாடுகள் பரிசீலிக்கப்படும்.

மருந்து விலைகளை குறைத்ததன் மூலம் எந்தவொரு நிறுவனத்துக்கும் நஷ்டம் ஏற்படவில்லை. எதிர்காலத்தில் மேலும் பல மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளன.

ஒரு நாட்டின் சனத்தொகையில் ஒரு இலட்சம் பேருக்கு சராசரியாக 200 வைத்தியர்கள் இருப்பது அவசியம். ஆனால், இலங்கையில் 1 இலட்சம் பேருக்கு 60 வைத்தியர்களே சேவை புரிகின்றனர்.- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டமைப்பு கவனிக்க வேண்டியது

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் பேரவை நேற்று ஏற்பாடு செய்திருந்த 'எழுக தமிழ்' நிகழ்வு குறிப்பிடத்தக்களவு வெற்றியுடன் ஒப்பேறியிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் - மட்டக்களப்பு நகரில் - வடக்கு, கிழக்கு இணைப்புப் பற்றிய செய்தியை வலியுறுத்தும் விதத்தில் ஆறாயிரத்துக்கும் குறையாத தமிழ் மக்கள் ஓரிடத்தில் திரண்டு தங்கள் எழுச்சியை ஒருங்கு சேர வெளிப்படுத்தியிருக்கின்றமை ஒரு சிறிய விடயமல்ல.

இன்றைய காலகட்டத்தில் இது முக்கியமானதோர் - குறிப்பிடத்தக்கதோர் - நிகழ்வு.

உரிமைக்கான போராட்டத்தில் பெரும் யுத்தத் தோல்விகளைச் சந்தித்து, அதனால் துவண்டு போயிருந்த தமிழ் மக்களிடையே ஓர் உணர்வெழுச்சியை மீள துளிர்விக்கச் செய்வதில் 'எழுக தமிழ்' காத்திரமான பங்காற்றியிருக்கின்றது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதுவும் கிழக்கில் அது பேரெழுச்சியுடன் அரங்கேறியிருக்கின்றமை ஒரு மாற்றத்துக்கான அறிகுறிதான்.

கிழக்கு 'எழுக தமிழ்' பல தரப்புக்களுக்கும் பல செய்திகளை சொல்லியிருக்கின்றது.

வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு - புலம் பெயர் தமிழர்களுக்கு - தென்னிலங்கைச் சிங்களச் சமூகத்தவர்களுக்கு - தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு - சர்வதேச சமூகத்தினருக்கு - இப்படி பல தரப்புகளுக்கும் பல செய்திகளை அது சொல்லியிருக்கின்றது.

எனினும், பிரதானமாக இன்று இலங்கைத் தமிழர்களின் ஏகோபித்த அரசியல் தலைமையாக - ஜனநாயக வழியில் எமது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக - விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அது சில செய்திகளை உணர்த்தி நிற்கின்றது என்பது கவனிப்புக்கு உரியதாகும்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் புல நிலைமைகளில் சடுதியான ஒரு மாற்றம் - வேறுபாடான போக்கு நிலமை - ஏற்பட்டு வருகின்றமையைக் கூட்டமைப்பின் தலைமை உணர வேண்டிய காலம் வந்திருப்பதாகக் கருதுகின்றோம்.

நீண்ட கால யுத்தத்தின் கொடூரங்களை அனுபவித்த நமது மக்கள், அவற்றின் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்காக நமது அரசியல் தலைமைகளின் பங்களிப்பை உரிமையுடன் பார்த்திருந்து, காத்திருந்து களைத்துப் போன நிலையில், தீர்வுக்கான வழிகளைத் தாங்களே தேடிப் புறப்பட்டு விட்டார்கள் என்பதை கள நிலைத் தகவல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

காணாமல் போனோருக்காக வவுனியாவில் நடைபெற்ற தொடர் உண்ணாவிரதம் தமிழர் அரசியலில் ஓர் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

அது போலவே, இப்போது கேப்பாபிலவிலும், புதுக்குடியிருப்பிலும் தமது காணிகளைப் படையினரிடமிருந்து மீட்பதற்காக மக்கள் நடத்தும் போராட்டமும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாக மாறியுள்ளன.

இவை எல்லாம், அரசியல் தலைமைகளின் பின்புலத்துடன் ஆரம்பிக்கப்பட்டவையல்ல.

தங்களின் அரசியல் தலைமைகளைப் புறக்கணித்து விட்டு - இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால், தங்களின் அரசியல் தலைமைகள் மீது நம்பிக்கை இழந்த நிலையில் - தாங்களாகவே தங்களுக்கு நியாயம் தேடி மக்கள் தனித்தும் கூட்டாகவும் போராடத் தயாராகி, வீதிக்கு இறங்கிவிட்டனர் என்பதையே இந்தப் போராட்டங்கள் நமக்கு ஊன்றி உணர்த்துகின்றன.

அதுவும், காணாமல் போனோரின் உறவுகளின் பிரதிநிதிகள் என்று கோதாவில் அரசுத் தலைமையுடன் பேச்சு நடத்தச் சென்றவர்கள், அந்தக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இருந்தால் தாங்கள் வெளியேறி விடுவோம் என்று வெளிப்படையாகக் கூறும் அளவுக்கு நிலைமை முகிழ்த்துப் பருத்திருக்கிறது.

அந்தக் கூட்டத்திலிருந்து தாங்களே, தாங்களாக வெளிநடப்புச் செய்தனர் என்று கூட்டமைப்பினர் காட்ட முயன்றாலும் உண்மையில் மக்கள் பிரதிநிதிகளை அந்த உறவுகள் வெளிப்படையாக நிராகரித்துப் புறம் ஒதுக்கினர் என்பது மறைக்கப்படக் கூடிய விடயமல்ல.

நிலைமையும், சூழலும் மாறி வருகின்றன. அதனைத் தமிழர்களின் அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து, உணர்ந்து, தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதைச் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கமாகும்.


ஆங்காங்கே தம்பாட்டில் வெளிக்கிளம்பும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், கிழக்கு 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு திரண்ட தமிழர் கூட்டம் போன்றவை அந்தச் செய்தியைத்தான் எடுத்துரைக்கின்றன என்பதை கூட்டமைப்பின் தலைமை ஊன்றி புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தப் புரிதலின் விளைவுதான் அரசுத் தலைமையுடனான மந்திராலோசனைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் மீது கடும் வார்த்தைகளால் சம்பந்தன் கொடுத்த சூடு என்பதும் எமக்குப் புலனாகின்றது.

தென்னிலங்கை அரசுடன் சாம, பேத, தான, தண்டம் ஆகிய மார்க்கங்களில் ஏதோ ஒன்றின் வழியில் ஊடாடி தனது மக்களுக்கு உரியதைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் கூட்டமைப்புத் தலைமை உள்ளது. அது தட்டிக் கழிக்க முடியாத ஒன்றுமாகும்.

அதைச் செய்வதற்கு தனது மக்கள் மீதான தனது பிடியையும், மக்களின் ஆதரவையும் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் கூட்டமைப்பு பற்றிப் பிடித்து வைத்திருக்க வேண்டும்.

நிலைமையை மறுசீராய்வு செய்து தன்னை வளப்படுத்திக் கொள்வது கூட்டமைப்பின் இன்றைய - கட்டாய - கடமையாக உள்ளது.




## கல்வி நிதி ஒதுக்கீட்டின் முன்னுரிமைகளை கல்வி அமைச்சு இனங்காண வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.11

கல்விக்கான நிதியொதுக்கீடுகளைச் செலவிட வேண்டிய முன்னுரிமைகளை இனங்காண்பதற்கு கல்வி அமைச்சு தலையீடு செய்யவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் பொன் விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

''கல்விக்காக பல்வேறு ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும் பாடசாலைகளில் நிலவும் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றமை பெரியளவிலான பிரச்சினை.

கடந்த ஆண்டின் மாகாண சபைகளுக்கான நிதி, தேவைக்கு அதிகமானது என்பதனால் அதனை வேறு விடயங்களுக்கு மாற்றுவதற்கு சில மாகாணக் கல்வி அமைச்சர்கள் கேட்கின்றனர். அந்தளவுக்கு நிதி கிடைத்திருந்தும் பெரும்பாலான மாகாணப் பாடசாலைகளில் கழிவறைகள், தளபாட வசதிகள் முழுமைபடுத்தப்படவில்லை.

இதனால் கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளில் முன்னுரிமைகளை இனங்காண்பதற்கு கல்வி அமைச்சு தலையிட்டு, குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

சகல இனங்களையும், மதங்களையும் சேர்ந்த பிள்ளைகள் சமமாகக் கல்வி பெறக்கூடிய மற்றும் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கல்வி பெறக்கூடிய முதன்மை ஆண்கள் பாடசாலையான டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரி இன, மத நல்லிணக்கத்தின் முன்னுதாரணம் வழங்கும் கல்வி நிறுவனமாகும்.'' -என்றார். (எ)

## இரகசியத் தகவல்களைக் கசியவிடும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள்

### குற்றஞ் சாட்டுகிறார் நிதி அமைச்சர்

கொழும்பு, பெப்.11

மத்திய வங்கியின் சில உயர் அதிகாரிகள் இரகசியத் தகவல்களை கசிய விடுகின்றனர் என்று நிதி அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மிகவும் முக்கியமானதும் இரகசியமானதுமான தகவல்களை உயர் அதிகாரிகள் ஊடகங்களுக்கு வழங்கி வருகின்றனர் என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மத்திய வங்கியில் தற்போது கடமையில் இல்லாத ஒருவரை பிரதி ஆளுநராக நியமிக்க தாம் முயற்சிப்பதாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் பொய்யானவை என்று குறிப்பிட்டுள்ள அவர், இந்தத் தகவல்களை யார் வழங்கியது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

நிதிச் சபையைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் பங்கேற்றிருந்த கூட்டம் ஒன்றில் பேசப்பட்ட விடயங்கள் கசிந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (எ)

## இலங்கை—இந்திய உறவுகள் நல்ல நிலையில்

கொழும்பு, பெப்.11

இந்தியாவுடனான உறவுகள் நல்ல நிலையில் இருக்கின்றன என்று இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திரதின நிகழ்வு ஒன்றின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் இந்திய வெளியுறவு ராஜாங்க அமைச்சர் எம். ஜே. அக்பர், வெளியுறவு செயலர் எஸ். ஜெய்சங்கர் உட்பட்டோர் பங்கேற்றனர்.

இதேவேளை மும்பையில் உள்ள இலங்கையின் கொன்சியூலர் அலுவலகத்திலும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்ச்சிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மஹிந்தவின் பிரஜாவுரிமையை ரத்துசெய்ய எவருக்கும் இடமில்லை

### ராஜாங்க அமைச்சர் டிலான் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.11

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரஜாவுரிமையை ரத்து செய்ய எவருக்கும் இடமளிக்கப்படாது என்று ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மஹிந்தவின் பிரஜாவுரிமையை ரத்து செய்வது தொடர்பான ஒரு யோசனை முன்வைக்கப்பட வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. அவரின் பிரஜாவுரிமையை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அதற்கு இடமளிக்கப்படாது.- என்றார். (எ)

## நாளை

12.02.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: மகம் மு.ப. 9.55வரை
திதி: துதியை பி.இ. 6.13 வரை
சுபநேரம் : 09.34 - 11.04 வரை
இராகுகாலம் : 05.04 - 06.34 வரை

# உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களை மீளப்பெறும் முயற்சிக்கு எதிராக மாகாணசபையில் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை மீளப்பெறும் வகையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தை இரத்துச் செய்து உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட் அரச தரப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கோரி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மாகாண, உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைகின்றன எனக் குறிப்பிட்ட முதலமைச்சர், 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமே ஒழிய அதனைப் பறிக்கின்ற வகையில் மத்திய அரச செயற் படக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாண சபையின் 84 ஆவது கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் அவைத் தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரால் இவ்விடயம் தொடர்பில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :

நகர அபிவிருத்தி அதிகார சபையால் 1985. 03.01 ஆம் ஆண்டு முதலாம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் உள்ளூர் அதிகார சபைகளுக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்கள் பாரிய நகர மற்றும் மேற்கத்தைய அபிவிருத்தி அமைச்சின் பணிப்பின் பெயரில் 2017.02.01 இல் இருந்து மீளப் பெறப்படும் என்று 2017.01.23 ஆம் திகதிய 01.11 இலக்க சுற்றறிக்கை மூலம் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசாங்கம் மாகாண சபைக்கு உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கும் அதிகாரங்களை 13 ஆவது திருத்தத்தின் மூலம் கையளிக்கும்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெற முடியாது என்று மேற்படி திருத்தத்தின் 09 ஆம் அட்டவணையில் 01 ஆம் நிரலில் தெரிவித்துள்ளது.

ஆனால், அபிவிருத்தி அடைந்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில் மேலதிக அதிகாரங்களைக் கையளிக்க வேண்டிய நிலையில் நகர அபிவிருத்திச் சபையானது 32 வருடங்களுக்கு முன்னர் வழங்கிய அதிகாரங்களைத் தற்போது மீளப் பெறுவதென்பது யதார்த்த ரீதியாக உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை முடக்குவதாகவே அமைகின்றது.

13 ஆவது அரசியல் திருத்தத்தில் முழுமையாக மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்ட உள்ளூராட்சி எனும் விடயத் தில் மத்தி அரசின் இத்தகைய நடவடிக்கையானது அதிகாரத்தைப் பறிக்கும் ஓர் உள்நோக்க நடவடிக்கையாகவே மாகாண சபை கருதுகின்றது.

எனவே, மத்திய அரசால் தற்போது வெளியிடப்பட்டிருக்கின்ற புதிய சுற்றுநிருபத்தை இரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரப்படுகின்றது. இப்படி அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சபையில் இந்தப் பிரேரணை ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

## நினைவுகளோடு பேசுதல்

யாழ்ப்பாணம்,பெப்.11

'ஊடகவியலாளர் அமரர் பு.சத்தியமூர்த்தியின் நினைவுகளோடு பேசுதல்' எனும் தலைப்பிலான சிறப்புக் கருத்தமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் எழுகலை இலக்கியப் பேரவை போசகர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் 'நினைவுகளைப் பேசுதல்"என்னும்தலைப்பில் கை.சரவணனும், 'உலகளாவிய சமூக இயக்கங்களின் இயங்கியலைப் புரிந்து கொள்ளல்' என்னும் தலைப்பில் ஹற்றன் நஷனல் வங்கி வடபிராந்திய முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரனும் உரையாற்றவுள்ளனர். (ச)

## ஜெனீவாவில் தமிழர் பேரணி

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்த ஐ.நா. நோக்கி அணிதிரள்வோம் வாரீர் என்னும் தொனிப்பொருளில் புலம்பெயர் தமிழ்த் தேசிய மக்களால் ஜெனீவாவில் பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 24 ஆம் திகதிவரை ஜெனீவாவில் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.இந்த நிலையில் மார்ச் 6 ஆம் திகதி இந்தப் பேரணியை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர் சு.ப. உதயகுமார் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## கேப்பாபிலவு போராட்டம் சர்வதேசத்தின் கவனத்துக்கு

கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டார பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள், இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பில் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டங்கள் பற்றிய விவரங்கள் சர்வதேச நாடுகளின் மற்றும் மனித வுரிமை அமைப்புகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளுக்கு மின்னஞ்சல் ஊடாக இது தொடர்பான அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் இன்றைய நாள்களில் ஐரோப்பிய ஒன்றியத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு உயர்மட்ட சந்திப்புகளிலும் தாயக மற்றும் புலம்பெயர் அரசியல் செயற்பாட்டாளர்களால் தாயகத்தில் இன்றும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இன்புலுவன்சா நோய் கட்டுக்குள் வந்தது

கொழும்பு, பெப்.11

பிபில மற்றும் மெதகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பரவிய இன்புலுவன்ஸா ஏ.எச்1.என்1 முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 27 ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப் பகுதிக்குள் 30 பேர் இந்த நோய்த் தாக்கம் காரணமாக பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வர் கர்ப்பவதிப் பெண்கள் எனவும் ஐவர் சிறுவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. இவர்களது இரத்த மாதிரிகள் பொரளை வைத்திய ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் நலம் பெற்ற சிலர் வீடு திரும்பியுள்ளனர். நோயாளர்களுக்கான மருந்துகளை பற்றாக்குறையின்றி தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## அனைத்துலக நீதிமன்ற விசாரணை கோரி ஐரோப்பிய நாடாளுமன்றம் முன் கவனவீர்ப்பு!


தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தமிழின அழிப்பு தொடர்பாக தீர ஆராய்ந்து அனைத்துலக நீதி மன்றில் விசாரணை நடத்தி எம் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க அனைத்துலக சமூகம் உதவ வேண்டும் என்று வலியுறுத்தும் கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ராஸ்பூர்க் ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்பாக எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து உறவுகளையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் நாட்டு மக்களிடம் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழினத்தின் மீது தொடர்ச்சியாக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் படுகொலையிலிருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கு பல்வேறுபட்ட அரசியல் போராட்டங்களை நாம் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமிழீழத்தில் சிங்கள பேரினவாத அரசால் திட்டமிட்டு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நில ஆக்கிரமிப்பை உடன் தடுத்து நிறுத்த கோரி கேப்பாபிலவு மக்களின் உரிமைப் போராட்டத்தை மேற்கொள்கின்றனர். இந்த விடயத்தை ஐரோப்பிய ஒன்றியம் கருத்தில் எடுத்து உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்தக் கவனவீர்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.-என்று தெரிவித்தனர். (ஐ)



# சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு முஸ்லிம்களுக்கு தனி சமஷ்டி அலகு

## நேற்றைய 'எழுக தமிழ்' நிகழ்வில் முதல்வர் விக்கி தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.11

''தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரே அரசியல் தீர்வாக விளங்கக் கூடியது சமஷ்டி முறையே. அந்த வகையிலான அரசமைப்புக்காக நாம் உழைக்க வேண்டும். அந்த சமஷ்டித் தீர்வில் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சமஷ்டி அலகு வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.''

- இவ்வாறு நேற்று மட்டக்களப்பு 'எழுக தமிழ்' நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அந்நிகழ்வில் அவர் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-

''எழுமின், விழிமின், இலட்சியத்தை அடையும் வரை நிறுத்தாதீர்கள்!'' என்றார் சுவாமி விவேகாநந்தர். கடோபநிஷதத்தில் வரும் சொற்களை உலகறியச் செய்தார் சுவாமி விவேகானந்தர். இன்று மட்டக்களப்பு விவேகானந்தா விளையாட்டுக் கழகத் திடலில் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருக்கும் எமது மக்களுக்கு நான் கூறுவதும் அதுவே. ''எழுமின்! விழி மின்! இலட்சியங்களை அடையும் வரை நிறுத்தாதீர்கள்!'' Arise, Awake , Stop not until you reach your goals!

எமது பாதை கரடு முரடாக அமையப் போகின்றது. அதற்கு நாங்கள் எங்களைத் தயார் படுத்த வேண்டியிருக்கின்றது. 69 வருடங்களுக்கும் மேலாக நாங்கள் எங்கள் குறைகளைக் கூறிக்கொண்டு வருகின்றோம். ஆனால் செவிடன் காதில் மகுடி இசைத்த கதையாகவே இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் உறங்குபவனை எழுப்பலாம். உறங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்புவது மிகச் சிரமம். ஒருவேளை பச்சைத் தண்ணீர் கொண்டு முகத்தில் தெளித்தால் அவன் எழும்பக் கூடும். உறங்குபவர்கள் போலக் காண்பவரை உசுப்பி எழுப்பவே இந்த 'எழுக தமிழ்' நடை பெறுகின்றது. மக்ளின் மனோ நிலையையே நாங்கள் பிரதிபலிக்கின்றோம்.

### இனிமேல் எங்களை பயங்கரவாதிகள் என்பர்

எங்கள் நடவடிக்கைகள் பிழையென்றும், நாட்டில் இருக்கும் நற்சூழலை நாங்கள் குழப்புகின்றோம் என்றும் எங்கள் மீது குற்றம் சாட்டப்படுகின்றது. நாங்கள் வாய்பேசாமடந்தைகளாக இருந்தால் அல்லது பெரும்பான்மையின அரசியல்வாதிகளுடன் ஒத்தூதினால் எங்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கிடைக்கும். துணிந்து எமது குறைகளைக் கூறினால் அது ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயலெனப்படும். ஆகமொத்தம் எமக்கெது தேவை என்பதிலும் பார்க்க தாம் தருவதை நாங்கள் ஏற்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கின்றார்கள் பெரும்பான்மை இன அரசியல் வாதிகள். இன்னும் சில காலம் போனால் எங்களைப் 'பயங்கரவாதிகள்' என்பார்கள் என்று நினைக்கின்றேன். ஏற்கனவே அவ்வாறு கூறிவருகின்றார்களோ நான் அறியேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் அமுலில் இருந்து வருகின்றது. அதன் ஓர் அம்சம் பற்றி நான் தெளிவு படுத்துவது நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன். ஒருவரை இன்னொருவர் கொல்கின்றார் அல்லது அடித்துத் துன்புறுத்துகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அச் செயல் எங்கள் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் குற்றமாகக் கணிக்கப்பட்டுள்ளது. அந்தக் குற்றச் செயலை இனங்கண்டு குற்றவியல் வழக்கா, பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்கா பதிய வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கு அடிப்படை வரையறுத்தல்கள் எவையும் சட்டத்தில் கூறப்படவில்லை. இதனைத் தீர்மானிப்பது அரசே. அல்லது அரச அதிகாரிகளே. அல்லது இராணுவத்தினரே. அல்லது பொலிஸாரே. இங்குதான் எம் மக்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை ஒட்டப்படுகின்றார்கள். அரசு நினைத்தால் ஒருவர் பயங்கரவாதி, இல்லையேல் அவர் சாதாரணக் குற்றவாளி. முன்னர் பயங்கரவாதநடவடிக்கைகளில் ஈடுபட்டு குற்றவாளியாக்கப்பட்டவரே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப் படலாம் என்றோ, அல்லது ஒருவர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாரேயானால் அவை



எவ்வாறு அடையாளப் படுத்தப்பட வேண்டும் என்றோ, அவ்வாறு அடையாளப்படுத்தப் பட்ட பின்னரே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவருக்குக் குற்றப்பத்திரிகை தயாரிக்கலாம் என்றோ சட்டத்தில் கூறப்படவில்லை. அரசோ, அரசின் சாட்சிகளோ ஒருவரைப் பயங்கரவாதி என்று அடையாளப்படுத்தினால் அதனை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்கின்றன.

### நீதிமன்ற நிலைமை

குற்றஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றைய வழக்குகளில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அதை மட்டும் வைத்து எம் இளைஞர்கள், யுவதிகள் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். குற்றம் உண்மையில் நடந்தேறியதா என்பதைக் கூட நீதிமன்றங்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லை. அதாவது குற்ற ஒப்புதல் கூறும் குற்றமானது உண்மையில் நடந்ததா என்று சுதந்திரமாக நீதிமன்றம் அறிந்துகொள்ள வேண்டும் என்றொரு சட்டமில்லை. அவ்வாறு அறிய பெரும்பான்மையான நீதி மன்றங்கள் சிரத்தை எடுப்பதும் இல்லை. இவை என்னுடைய பல வருட நீதித்துறை சார்ந்த அனுபவம்.

### யார் பயங்கரவாதிகள்?

இதனை இன்று ஏன் இங்கு கூறுகின்றேன் என்றால் உரிமைகளைக் கோருவோர், உரிமைகளுக்காகப் போராடுவோர், உரிமைகளைத் தாருங்கள் என்று உரக்கக் கேட்போர் யாவரும் ஆட்சியாளர்கள் பார்வையில் பயங்கரவாதி களாகவே காணப்படுகின்றார்கள். அன்று ''வெள்ளையனே வெளியேறு'' என்ற வர்களெல்லாம் சட்டத்தின் முன் குற்றவாளிகள் ஆக்கப்பட்டார்கள். வெள்ளையன் வெளியேறியதும் கெப்பற்றிப்பொலவும், சூரசாதியேலும் இன்னும் பலரும் சிங்கள மக்களின் வீரசூரர்கள் ஆனார்கள். இன்று எம்மை பயங்கரவாதிகளாகப் பார்ப்பவர்கள் இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எமது உரிமைகளை நாம் கோருவது குற்றமல்ல என்பதை எமது சிங்களச் சகோதரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எம்மைப் பயங்கரவாதிகள் என்போர் என்ன கூறப் பார்க்கின்றார்கள்? நாங்கள் எங்கள் இராணுவத்தை வடக்கு, கிழக்கில் நிறுத்தியுள்ளோம். பயங்கரவாதத்தடைச்சட்டத்தை அமுலில் வைத்திருக்கின்றோம். ஆறாவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தையும் தொடர்ந்து அமுலில் வைத்திருக்கின்றோம். பன்னாட்டு அரசாங்கங்களின் பரிந்துரைகளைப் பெற்றுள்ளோம். இவ்வாறிருக்கவும் நீங்கள் உங்கள் உரிமைகளைக் கேட்கின்றீர்கள் என்றால் நீங்கள் பயங்கரவாதிகள் தானே என்பதுதான் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் அரசியல் நிலை.

உரிமைகள் அற்றவர்கள்தான் உரிமைகளையும் உரித்துக்களையும் கேட்பார்கள். உரிமைகள் இருந்திருந்தால் ஏன் வெயிலில் இருந்து, பனியில் காய்ந்து, மழையில் நனைந்து கேட்கப் போகின்றார்கள்? இல்லாததால்தானே கேட்கின்றோம். இதைச் சிங்கள சகோதர, சகோதரிகள் உணர வேண்டும். எம் உரித்துக்களை நாம் கோர விடாது அடுத்து வந்த அரசாங்கங்கள் தடுத்துள்ளன. கடுமையான சட்டங்களாலும் இராணுவப் பிரசன்னங்களாலும் அரசியல் யாப்பு அனுசரணைகளுடனும் இதைச் சாதித்துள்ளார்கள்.

### போர்க் குற்ற விசாரணை எப்படி வந்தது?

அது மட்டுமன்றி கடைசிப்போர் ஒரு தலைப்பட்சமாக சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் எவருடைய பிரசன்னங்களும் இல்லாத நிலையில், சர்வதேச போர் விதிகளுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை சிங்கள மக்கள் யாவரும் அறிவர். அவ்வேளையில் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல; சாதாரண அப்பாவிப் பொது மக்கள் பெருவாரியாகக் கொல்லப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை திரிபுபடுத்தப்பட்டு மிகச் சொற்ப தொகையாக எந்தவித மனச்சாட்சியுமின்றி சர்வதேச உலகிற்கு காட்டப்பட்டுள்ளது. இதனால் விளைந்ததுதான் சர்வதேச போர்க் குற்ற விசாரணை முன் மொழிவு. இந்தத் தீர் மானம் 2015 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது சர்வதேசமும் இலங்கை அரசாங்கமும் ஒன்றிணைந்து அதனை ஏற்றுக்கொண்டன. இருந்தபோதிலும் ஒன்றரை வருடங்கள் கழிந்த பின்னரும் இலங்கை அரசாங்கம் தான் அளித்த முக்கிய வாக்குறுதிகளை இதுகாறும் நிறைவேற்ற முன்வரவில்லை.

(7ஆம் பக்கம் பார்க்க...)


மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **6517 \| வே**<br>1986 \| கரவெட்டி \|180 cm<br>Lecturer \| இலங்கை<br>திருவாதிரை (மிதுனம்) \| கி.பா: 35 | **6170 \| வே**<br>1979\| யாழ்நகர் \| 163 cm<br>Lecturer \| இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்) \| கி.பா: 78 |
| **3317 \| வே**<br>1984 \| சாவகச்சேரி \| 170 cm<br>Lecturer \|இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்)\| கி.பா: 15 | **5878 \| வே**<br>1977 \| நெல்லியடி \| 165 cm<br>Lecturer \| இலங்கை<br>உத்தராடம் (மகரம்) \| கி.பா: 25 |
| **6535 \| வே**<br>1978 \| யாழ்நகர் \| 162 cm<br>Lecturer \| இலங்கை<br>பூரம் (சிம்மம்) \| கி.பா: 2 | **5186 \| வே**<br>1989 \| நல்லூர் \| 160 cm<br>Lecturer \|இலங்கை<br>கேட்டை (விருச்சிகம்)\| கி.பா: 25\|செ: 4 |
| **5445 \| வே**<br>1969 \| அல்லைப்பிட்டி \| 178 cm<br>Lecturer \| இலங்கை\| Divorced<br>பரணி (மேடம்) \|கி.பா: 14 | **7596 \| வே**<br>1985 \| காரைநகர் \| 168 cm<br>Lecturer \| இலங்கை<br>அனுஷம் (விருச்சிகம்) \| கி.பா: 16 |
| **5710 \| வே**<br>1987 \| அல்வாய் \|168 cm<br>Assistant Engineer\| இலங்கை<br>கேட்டை (விருச்சிகம்)\|கி.பா: 30\|செ: 12 | **5620 \| வே**<br>1984 \| கோப்பாய் \|156 cm<br>Lecturer \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா:41 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
011 406 32 82 | 021 492 75 27

# சமஷ்டி முறையிலான...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அண்மையில் இன்னலுறும் கேப்பாபிலவு மக்களைக் காணச் சென்றிருந்தேன். போகும் வழியெல்லாம் ஏக்கர் ஏக்கரான காடார்ந்த நிலங்களைக் கொங்கிறீட் கட்டைகள் நாட்டி, கம்பி போட்டு, கையகப்படுத்தி வைத்துள்ளார்கள் படைவீரர்கள். அவற்றிலே மக்களின் உறுதிக் காணிகளும் அடங்குவன. தம் சொந்த இடங்களுக்கு எம் மக்கள் திரும்பிச் செல்வதற்கு ஆங்காங்கே தடையாக உள்ளார்கள் இராணுவத்தினரும், கடற்படைவீரர்களும், ஆகாயப் படைவீரர்களும்.அதற்கு எதிராக எம்மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் அவர்களைத் துன்புறுத்துகின்றார்கள்.

**யார் பாதுகாப்புக்காக இந்த அடாவடித்தனம்?**

ஏன் என்று இவர்களிடம் கேட்டால் பாதுகாப்புக்கு அவசியம் என்கின்றார்கள். யார் பாதுகாப்புக்காக இந்த அடாவடித்தனம்? எங்கள் பாதுகாப்புக்காகவா? அல்லது உங்கள் பாதுகாப்புக்காகவா? அல்லது அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காகவா? என்று கேட்டால் பதிலில்லை. எங்களுக்கு உங்கள் பாதுகாப்பு தேவையில்லை என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றோம். போதிய பொலிஸார் இருந்தால் பொறுப்பாக அவர்கள் பாதுகாப்பு வழங்குவார்கள் என்று நாங்கள் கூறினால் அதற்கு அவர்கள் செவிசாய்க்கின்றார்கள் இல்லை. அவர்கள் போட்டிருக்கும் பாதுகாப்பு அரண்களையும், கட்டியுள்ள மாளிகைகளையும், எடுத்திருக்கும் எம்மக்களின் காணிகளின் விஸ்தீரணத்தையும் பார்த்தால் இன்னும் 500, 600 வருடங்களுக்கு மேலாகத் தாம் தொடர்ந்திருக்கப் போகின்றார்கள் என்ற எண்ணத்தில்தான் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அவர்கள் செய்வது பிழை என்று நாங்கள் கூறினால் நீங்கள் சமாதானத்தைச் சீர்குலைப்பவர்கள் என்று எமக்குப் பட்டம் சுட்டப் பார்க்கின்றார்கள்.

**அமைதிப்படைக்கு நடந்த கதி என்ன?**

முன்னர் இந்திய அமைதி காக்கும் படைகள் நாங்கள் இங்கு 100 வருடங்களுக்கேனும் இருக்கப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு தான் வந்தார்கள். வி.பி.சிங் அரசாங்கம் அவர்களைத் திரும்ப அழைத்தது. அது போல எங்கள் மாண்புமிகு ஜனாதிபதி சிறிசேன அவர்களின் அரசாங்கம் இராணுவத்தினரைத் திரும்ப அழைக்க வேண்டும். தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற, மனிதாபிமானத்துடன் பக்கச்சார்பின்றி, போருக்குப் பின்னரான மக்களின் பாதிப்புக்களை உணர்ந்து செயல்படக்கூடிய பொலிஸாரை வடகிழக்கில் இரட்டிப்பாக நிலைநிறுத்த வேண்டும் என்பதே எமது ஒரு கோரிக்கை.

போர் முடிந்து 8 வருடங்கள் ஆகியும் இராணுவத்தினரைத் திரும்ப அழைக்காததன் மர்மம் என்ன? விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விட்டோம் எனக் கூறுகின்றார்கள். பின் எதற்காக வடக்கிலும் கிழக்கிலும் வான் படைகளும், கடற்படைகளும், காலாற்படைகளும்? அளவுக்கதிகமான படைகளைத் தம்முடைய தரைகளில் நிலை நிறுத்த இடமில்லை என்றுதான் அவர்களை எம் மத்தியில் உலாவ விட்டுள்ளார்களா? அல்லது நாம் எவரும் சுதந்திரக் காற்றை உட்கொள்ளக் கூடாது என்று நினைக்கின்றார்களா? அல்லது எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப விடாது எம் மக்களின் காணிகளையும், வீடுகளையும், கடைகளையும், கடற்கரைத் தொழில்களையும், விவசாய நில புலன்களையும் நிரந்தரமாகச் சுவீகரித்து எம்மை அடக்கி ஆள நினைக்கின்றார்களா?

ஒரு சில நாள்களுக்கு முன்னர் உள்ளூர் அதிகாரசபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரித்துக்கள், தத்துவங்கள் சிலவற்றை 01.02.2017 இல் இருந்து திரும்பப் பெற்று நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப் போவதாக முகாமைத்துவசபை பத்திர சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. எமது உரித்துக்களைப் பறிக்காதீர்கள், திரும்பத் தாருங்கள் என்று நாங்கள் போராடி வருகின்றோம். சட்டத்திற்கு முரணாக எங்கள் உரிமைகள் உங்களால் தடை செய்யப்பட்டு கையேற்கப் பட்டுள்ளன. சுற்றுநிருபத்தை இரத்துச் செய்து முன்னிருந்த உரிமைகளைத் திரும்பத் தாருங்கள் என்று நேற்று எமது வடமாகாண சபையில் நாங்கள் பிரேரணை கொண்டுவந்து ஏற்றுக்கொண்டுள்ளோம்.ஆகவே பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் கீழ் தரப் பட்ட சொற்ப உரித்துக்களையும் திரும்பப் பெறப்பார்க்கின்றது அரசாங்கம்.

**தென்னிலங்கையின் விசித்திரமான கருத்து**

ஒரு சில பெரும்பான்மை அரசியல்வாதிகளும் எமது சிங்கள சகோதரர்கள் சிலரும் ஒரு விசித்திரமான கருத்தை முன்வைக்கின்றார்கள். ''நாங்கள் தருவதையுந் தர மாட்டோம், நீங்கள் தகாத முறையில் 'தா' என்று கேட்டால்'' என்று கூறுகின்றார்கள். எப்பொழுதையா நீங்கள் தந் தீர்கள்? தருவதாகக் கூறினீர்களே ஒழிய தரவில்லையே! நீங்கள் தராத ஒன்றைத்தானே தாருங்கள் என்கின்றோம். எம் உரித்துக்களைப் பறித்து வைத்துக் கொண்டு வெறுமனே தருவதாக 60 வருடங்களுக்கு மேலாகக் கூறிக் கொண்டு வந்து விட்டு இப்பொழுது ''நீங்கள் கேட்டால் தரமாட்டோம்'' என்பதன் அர்த்தம் என்ன? நாம் நினைத்ததைத் தான் தருவோம். நீங்கள் கேட்பதைத் தர மாட்டோம் என்பது தானே அர்த்தம்? ஆனால் சட்டத்தில் அப்படிக் கூறப்படவில்லையே. உரிமைகள் உரித்துக்கள் பெரும்பான்மை மக்களுக்கு மட்டுந்தான், சிறுபான்மை யினருக்கு அல்ல என்று சட்டம் கூறவில்லையே! மேலும் வடக்குக் கிழக்கில் 2000 வருடங்களுக்கு மேலாக தமிழ்ப் பேசும் மக்கள்தான் பெரும்பான்மையினர். ஆகவே நாங்களும் எங்கள் பிரதேசங்களில் பெரும்பான்மையினரே. எனினும் சட்டம் பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி, சிறுபான்மையினருக்கு ஒரு நீதி என்று கூறவில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சில பல உரித்துக்கள் இருப்பதைச் சட்டம் அங்கீகரிக்கின்றது, ஏற்றுக் கொள்கின்றது. அதற்கு மேலாகக் குழுமங்களின், மனித குழுக்களின் உரித்துக்களையும் சட்டம் ஏற்றுள்ளது. நாம் இழந்த உரிமைகளை ஜனநாயக ரீதியில் மீளப் பெறுவதற்கு முயற்சிப்பது வகுப்புவாதமாகவோ, தீவிரவாதமாகவோ, அநீதியாகவோ கருத முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நியதிகளுக்கு அமைவாக ஒப்புக் கொள்ளப் பட்ட உரிமை சாசனங்களின் அடிப்படையில் ஓர் இனத்தின் உரிமைகள், அடையாளங்கள் மற்றும் மரபு ரீதியான, சரித்திர ரீதியான வதிவிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டுதலே எமது குறிக்கோளாகும்.

1987 ஆம் ஆண்டில் நாங்கள் பதின்மூன்றாவது திருத்தச் சட்ட மூலம் தந்தோம் அல்லவா என்கின்றார்கள் சில சிங்களத் தலைவர்கள். நீங்கள் எங்கே தந்தீர்கள்? அது இந்தியாவின் அனுசரணையால் கிடைத்தது. அதுவும் இந்தியர்களுக்குத் தெரியாமல் சட்டத்தைப் பலமற்றதாக மாற்றிய பின்னரே தரப்பட்டது.தருவதற்கு உங்களுக்கு மனமிருந்தால் நாங்கள் கேட்காமலே தந்திருப்பீர்களே!

இந்த யதார்த்தத்தைத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர்கள் அமரர் அமிர்தலிங்கம்,அமரர் சிவசிதம்பரம் ஆகியோரும் தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் 28.10.1987 ஆம் ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதமர் இராஜீவ்காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் வெகு விவரமாக எழுதி அவருடைய தலையீட்டை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அது நடைபெறவில்லை.

**உங்களை நம்பிய கூட்டமைப்புத் தலைவர்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் உங்களை எவ்வளவு நம்பினார்? 2016 இல் கட்டாயம் தருவார்கள் என்று எதிர்பார்த்தார். தந்தீர்களா? உங்களுக்குத் தர மனமில்லை என்பது உலகறிந்த விடயம். எனவே நாங்கள் கூட்டம் கூடிக் கேட்க வேண்டிய நிலைக்கு எங்களைத் தள்ளியது நீங்களே என்று அரசாங்கத்தைப் பார்த்துக் குறை கூறுகின்றேன். எங்கள் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதும் உங்களாலேயே என்று குற்றம் சாட்டுகின்றேன்.

**எமது உரிமைகளை விலை பேச முயற்சி**

முன்னைய ஜனாதிபதியின் காலத்தில் அவர் 18 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தினார் தமிழர்களுடன். ஏதேனுந் தந்தாரா? இப்பொழுது ஜெனீவாவில் மார்ச் மாதத்தில் கூட்டம் போடப் போகின்றார்கள் என்றதும் அதைத் தரப்போகின்றோம், இதைத் தரப்போகின்றோம் என்று விட்டு இன்று வரையில் ஒன்றுமே தரவில்லை, தர எத்தனிக்கவும் இல்லை. இருபதுக்கு மேலான உத்தரவாதங்களை இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் சர்வதேச சமூகத்திற்கு 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அளித்தது. எவ்வெவற்றை இதுவரையில் நிறைவேற்றியுள்ளார்கள்? நிறைவேற்றியதாகக் கூற எத்தனிப்பவைகளிலும் மக்களுக்கு பயன் ஏதும் கிடைத்துள்ளதா? மாறாக அரசியல் யாப்பு உருவாக்கத்தின் நிமித்தம் போர்க்குற்ற விசாரணை தேவையில்லை என்று சந்திரிக்கா அம்மையார் கூறியுள்ளார். இவை இரண்டுக்கும் தொடர்பே இல்லை. ஒன்று நடந்து முடிந்தது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மற்றையது இன்னும் நடைபெறாதது. அரசியல் சம்பந்தமாக எமக்கிருக்கும் உரித்துக்களைத் தர, எம்மிடம் இருந்து பறித்தெடுத்த உரித்துக்களைத் தர, பாதிக்கப்பட்ட எம் மக்களின் நலனையும் உரிமைகளையும் விலைபேசப் பார்க்கின்றாரா சந்திரிக்கா அம்மையார்?

அதுமட்டுமல்ல. அண்மைக் காலங்களில் எமக்கு ஏற்கனவே இருக்கும் உரித்துக்களைத் திரும்பப் பெறும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றது அரசாங்கம். மேலும் எம் மாகாணக் காணிகளில் தென்னவர்களைத் தேர்ந்தெடுத்துக் குடிவைக்கின்றார்கள். எம்மவரை அவற்றிலிருந்து துரத்துகின்றார்கள். எமக்கிருக்குங் காணி உரித்துக்களைத் தமதாக்கிக் கொண்டு மேலும் மேலும் படையினருக்கு மேலதிகக் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள்.

தாம் செய்யுந் தவறுகளை மூடி மறைத்து விட்டு எம்மேல் பழியைப் போட எத்தனிக்கின்றது அரசாங்கம். இந்நிலையில் தான் நாம் மிகவும் விழிப்படைய வேண்டிய ஒரு தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

**தமிழ் அரசியல் தலைமையின் தவறான நிலைப்பாடு**

எமது அரசியல் தேவைகள் மற்றும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் ஆகியவற்றை இந்த அரசின் புதிய அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வகையிலான சில அரசியல் அறிவுரைகளை அரசுக்கு எடுத்துக் கூறுகின்ற -அத்துடன் மக்கள் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய- ஒருநிகழ்வாகவே 'எழுக தமிழ்' நிகழ்வை நாம் அன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்திருந்தோம். ஆனால் அதன்பின் எம்மைப் பலரும் பல விதமாக விமர்சனத்திற்கு உள்ளாக்கியமை மட்டுமன்றி நாம் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கான முத்தாய்ப்பு வேலைகளில் ஈடுபடுகின்றோம், தமிழ் மக்களின் ஒட்டுமொத்தப் பலத்தையுங் கூறுபோடுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம் என எமது தமிழ் அரசியல் தலைமைகள் கூட நேரடியாகவும் அதே நேரம் மறைமுகமாகவும் கருத்துக்களை முன்வைக்கத் தலைப்பட்டன. அவர்களுக்குப் பக்க பலமாக நாங்கள் நிற்கின்றோம் என்பதை மறந்து அவ்வாறு கூறத் தலைப்பட்டார்கள்.

அதே போன்று சிங்களத் தலைமைகளும் எம்மை அடிப்படைவாதிகள், அரசியல் குழப்பத்தை உண்டுபண்ண முயல்பவர்கள் எனப் பல்வேறு விதமாக சித்திரித்ததுடன் நாம் அரசுக்கு எதிரான தீவிரவாதப் போக்கைக் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றோம் என்ற தவறான கருத்துக்களையும் முன்வைக்கத் தலைப்பட்டனர்.

**புதிதாக எதுவும் நாம் கேட்கவில்லை**

நாம் அன்று தெரிவித்த அதே கருத்துக்களையே இன்றும் வலியுறுத்துகின்றோம். ஏனென்றால் எமது கருத்துக்கள் கடந்த 69 வருடகாலமாக எம்மால் கூறப்பட்டுவரும் கருத்துக்களே. அதில் மாற்றம் எதுவுமில்லை. புதிதாக நாம் எதுவுங் கேட்கவில்லை. எமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறி எம் மக்கள் அங்கீகரித்த அதே கருத்துக்களையே நாம் கூறி வருகின்றோம்.

வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பன நேற்று இன்று முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் அல்ல. இந்தக் கருத்துக்கள் அன்று முன்வைக்கப்பட்டதாலேயே பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்பாடு உருவாகியது. ஆனால் சிலரின் உன்மத்த உறழ்வுகளால் அந்த உடன்பாடு கிழித்தெறியப்பட்டது. டட்லி - செல்வநாயகம் உடன்பாடும் அதே கருத்துக்களையே பிரதிபலித்தது. ஆனால் அந்த உடன்பாட்டுக்கும் அதே கதியே. இந்தியாவின் அனுசரணையால் 13 ஆவது திருத்தச்சட்டம் யாக்கப்பட்டதால் இதுவரையில் அது நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் அதனையுஞ் சட்டங் கொண்டும் சுற்றறிக்கைகள் கொண்டும் மலினப்படுத்தியுள்ளார்கள் மத்தியில் உள்ள பெரும்பான்மை இனத் தலைவர்கள். எனவேதான் எமது கோரிக்கைகளை மேலும் முன்வைக்க வேண்டிய அவசியம் எமக்கெழுந்துள்ளது. நாங்கள் குழப்பம் விளைவிக்கவில்லை.

குழப்பத்துக்குக் காரணமே தொடர்ந்து வந்த பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் தான். கூட்டாட்சி என்றால் பிரிவினையே என்ற பொய்யை சிங்கள மக்களுக்கு இதுகாறும் கூறிவந்தவர்களும் இந்தத் தலைவர்களே.

**யுத்தப் பாதிப்பு**

இலங்கையில் இடம்பெற்ற பாரிய இன அழிப்பு யுத்தமானது 2009ம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையிலும், பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டு இன்னும் பலர் ஊனமுற்றவர்களாக எழுந்து நடமாட முடியாதவர்களாக மாற்றப்பட்ட நிலையிலும், வீடு, வாசல், சொத்து, சுகம், காணி, பூமி என அனைத்தையும் இழந்து கையறு நிலையில் ஏதிலிகளாக எமது மக்கள் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையிலும் நாம் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான ஓர் அரசியல் தீர்வையே நாடியிருந்தோம்; நாடுகின்றோம்.

எனினும் அரசியல் யாப்புக்களில் பூரணமான அல்லது வலுவான திருத்தங்களை மேற்கொள்ள விழைந்தால் அவற்றை சர்வஜன வாக்கெடுப்புக்களின் மூலமே நிறைவேற்ற வேண்டி வரும், பெரும்பான்மை சிங்கள மக்கள் அதை விரும்பமாட்டார்கள் எனப் பூச்சாண்டி காட்டித் தீர்வுகளை மலினப்படுத்துவதும், அடிப்படையாகக் கொடுக்க வேண்டியவற்றை கொடுக்காமல் விடுவதற்கு அதனை ஒரு சாட்டாக கைக்கொள்கின்ற யுக்தியையும் அரசுகள் கடைப்பிடித்து வந்துள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# சமஷ்டி முறையிலான...

(7 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

### அரசமைப்பில் முன்னேற்றம் யாது?

இதே தந்திரத்தையே இப்பொழுதும் ஒரு சாரார் கையாள முயற்சிக்கின்றனர். இது நாம் எழுந்தமானமாகச் சொல்லுகின்ற ஒரு கருத்தல்ல. இந்த அரசில் அங்கம் வகிக்கின்ற இரு பெரும்பான்மை அரசுக் கட்சிகளும் இந்த நாட்டின் அரசமைப்பு ஒற்றையாட்சிக்கு அமைவாகவே தொடரும் என்றும் இந்த நாட் டில் சமஷ்டி அரசமைப்பிற்கு இட மில்லை எனவும் இந்த நாடு மத சார்பற்ற நாடாக மாறாது என்றும் உரக்கக் கூறுவதைநாம்காண்கின்றோம். அதற்கும் மேலாக ஓர் அரசியல் தலைவர் 13 ஆவது அரசமைப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு மேலே மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவது பற்றி சிந்திக்கின்ற தருணம் இது வல்ல என்று கண்டி மரநகரில் வைத்துத் தெரிவித்திருப்பதும் கவனிக்கப்படல் வேண்டும். இவற்றையெல்லாம் பார்க்கின்ற போது அரசமைப்புத் திருத் தத்தில் இப்போது இருக்கின்ற நிலையை விட ஒரு சிறு முன்னேற்றங் கூட ஏற்படும் என்று எண்ணத் தோன்றவில்லை. இது எமக்கு ஒரு புதிய வெளிச்சத்தைக் காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடந்த முதலாவது 'எழுக தமிழ்' நிகழ்ச்சியையும் விட உறுதியாகவும் ஆக்கோரசமாகவும் எமது கோரிக்கைகளை முன் வைக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது என்பதை உங்கள் அனைவருக்கும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

மீண்டும் மீண்டும் எங்களுடைய கோரிக்கைகளை நாம் உரத்துச் சொல்ல வேண்டிய தேவையும் கடப்பாடும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வகையிலே இந்த 'எழுக தமிழ்' நிகழ்வானது மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. வெளிநாட்டவர்கள் எம் நாட்டில் யுத்தம் முடிந்த பின் நடந்து வருவதை நன்றாக உணர்ந்துள்ளார்கள். ஆகவே ஜனநாயக விழுமியங்களுக்கு அமைவான எங்களுடைய நடவடிக்கைகளை வெளிநாட்டு அரசாங்கங்கள் வரவேற்கின்றன என்றே நான் கூறுவேன். அண்மையில் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் ''ஏன் சமஷ்டிக்கு உங்கள் நாட்டில்எதிர்ப்புக்காட்டுகின்றார்கள், சமஷ்டி முறைதானே யாவரையும் சேர்த்துக் கொண்டு முன்னேறக் கூடியது'' என்றார். அதற்கு நான் ''பிரித்தானியர் வெளியேறும் போது பெரும்பான்மையினத்தவர்களுக்கு கூடிய அதிகாரங்களையும், வலுவையும் கொடுத்துச் சென்று விட்டார்கள். அதைத் தொடர்ந்து தக்க வைக்கவே அவர்கள் சமஷ்டியைப் பிரிவினை என்கின்றார்கள்'' என்றேன்.

நாம் முன்னெடுக்கின்ற இந்த 'எழுக தமிழ்' என்ற நிகழ்வு தமிழ்ப் பேசும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை ஜனநாயக முறைப்படி கேட்டெடுத்துப் பேணிப் பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியே தவிர அரசியல் குட்டையைக் குழப்பும் எண்ணமோ அல்லது வேறு எந்த கபட நோக்கோ எமக்கில்லை.

மாறாக இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான பூர்வீக பாரம்பரியத்தைக் கொண்ட தனித்துவமான ஒரு தேசிய இனம், தமது இருப்பை உறுதி செய்து, தம்மைத் தாமே ஆளக்கூடிய ஒரு நிலையை உருவாக்குவதற்கு ஏற்ற ஓர் அரசமைப்பைப் பெற்றுக் கொள்ளவே விழைகின்றது. எமது நடவடிக்கைகளை சர்வதேச அரசியல் அமைப்புக்களும் மற்றும் ஐக்கிய நாடுகள் தாபனங்களும் நன்குணர்ந்து எமக் குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நாம் விரும் புகின்றோம்.எங்கள் அரசியல் கோரிக்கைகள் நியாயமானவை. நாங்கள் பிரிவினை கோர வில்லை. சமஷ்டியையே கேட்கின்றோம். கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து போன்று நாட்டை ஒருமைப்படுத்தி தன்மானத் துடனும் ஐக்கியத்துடனும் வாழவே விரும்புகின்றோம்.

### நாம் கேட்கும் கேள்விகள்

எனினும் நாங்கள் அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய கேள்விகள் சில உண்டு. அவை பின்வருமாறு:-

1.யுத்தம் முடிவடைந்து எட்டுஆண்டுகள்பூர்த்தியடைய இருக்கும் நிலையிலும் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்னும் முழுமையாக விடு விக்கப்படாதமை ஏன்? மேலும் மேலும் கூடிய காணிகளைக் கையகப்படுத்த விளைவது ஏன்? எமது சில உரித்துக்களைத் தட்டிப் பறித்து அதிகார சபை ஒன்றிடம் கையளிக்கப் பார்ப்பதின் தாற்பரியம் என்ன? சட்டத்திற்குப் புறம்பாகவெளிமாகாணங்களில் இருந்து கொண்டு வந்து வடமாகாணத்தினுள் பலாத்காரமாக குடியேற்றியுள்ள சிங்கள குடியேற்ற வாசிகளின் இருப்பிடங்களைத் தமிழ் உள்ளூராட்சி வட்டாரங்களுடன் சேர்க்க முனைவதன் தந்திரம் என்ன?

2.புத்த கோவில்கள் அமைப்பது தொடர்பில் நாம் மிகத் தெளிவான கருத்துக்களை முன்வைத்திருந்தோம். புத்த கோவில்கள் கட்டுவதில் எமக்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை. ஆனால் புதிதாக அமைக்கபடுகின்ற கோவில்கள் எந்த மதம் சார்ந்ததாக இருப்பினும் எங்கே? எப்படி? எவரால்? அமைக்கப்பட வேண்டும் என்பதிலேயே கருத்து முரண்பாடுகள்தோன்றியுள்ளன என்று கூறியிருந்தோம். பௌத்த மதத்தை சார்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் புத்த கோவில்களை அமைப்பதற்கு நாம் எதுவித மறுப்புக் களையுந் தெரிவிக்கவில்லை. அவர்கள் அவற்றுக்கான உரிய அனுமதிகளை முறையாகப் பெற்று புதிய கோவில்களை அமைத்துக் கொள்ளமுடியும். அப்படியல்லாது பௌத்தர்கள் எவரும் நிரந்தரமாக குடியிருக்காத பகுதிகளில் எந்தவித முன்னனுமதிகளும் இன்றி தனியார்களின் காணிகளிலும் இராணுவத்தினர் உதவியுடன் அடாத்தாக கைப்பற்றப்பட்ட அரச காணிகளிலும் புதிய புதிய பௌத்த கோவில்களை அமைப்பதும் பிற மத வணக்கத் தலங்களை இடித்து அழிப்பதுமாகிய செயற்பாடுகளில்ஈடுபடுவது எதற்காக?

3.பாரிய உடல் உபாதைக்குஉள்ளானஅங்கவீனர்கள்வன்னி மாவட்டத்தில் மட்டும் ஆயிரக் கணக்கில் உதவிக்காகக் காத்திருக்கின்றனர். எனினும் அரசினால் வழங்கப்படுகின்ற நிதி 300 பேர் வரையான பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் உதவி பெறுநர் ஒருவர் மரணிக்கின்ற வேளையிலேயே இன்னொருவருக்கு இவ்வுதவி கிடைக்கக் கூடிய துர்பாக்கிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கின்றோம் எனப் பெருமளவில் விளம்பரம் செய்யும் அரசு மிகவும் அவசரமான அடிப்படைத் தேவைகளைக் கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அல்லது அங்கவீனர்களுக்கு கூட உதவ முடியாதிருப்பது ஏன்?அசூயையா? அக்கறையின்மையா? அலட்சியமா? அரசியல் பழிவாங்கலா?

4.பொருத்து வீடுகள் வேண்டாம் என்றதும் வங்கிக் கடன் பெற்று வீடுகள் கட்டித் தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் திரும்பவும்பொருத்து வீடுகளை எம் மாகாணத்தில் அறிமுகப்படுத்த விளைவதன் மர்மம் என்ன?

5.பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காமல் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைத்திருப்பது ஏன்?

6. விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துவிட்டதாக அரசாங்கம் அறிவித்த பின் புலிகள் திரும்பவும் வந்துவிட்டார்கள் அல்லது வரப் போகின்றார்கள் என்று பூச்சாண்டி காட்டுவது என்ன காரணத்திற்காக? அதுவும் எமது மக்கள் வன்முறை களைந்து ஒருமித்த ஒரு நாட்டினுள் சமஷ்டியே சிறந்தது என்று கனடா, சுவிற்சர்லாந்து, பெல்ஜியம் போன்ற நாடுகளின் முன்மாதிரியை எடுத்துக் காட்டி ஜனநாயக ரீதியாக அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டு செல்ல முன் வந்திருக்கும் இந்த நேரத்தில் இவ்வாறான பொய்யான புனைந்துரைகளைப் பகர்வதின் நோக்கம் என்ன?

7.காணாமற் போனவர்கள் சம்பந்தமாக வலுவற்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து விட்டு அதைக் கூட நடைமுறைப்படுத்த முன் வராததின் காரணம் என்ன?


### தமிழர் - முஸ்லிம் ஒற்றுமை அவசியம்

இறுதியாக ஒரு முக்கிய விடயத்தை இந்த மட்டக்களப்பு மண்ணில் கூற விரும்புகின்றேன். இன்றைய நிலையில் இந்த நாட்டில்தமிழ் மொழியைப் பேசுகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் ஒன்றாக இணைந்து கொண்டு அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும் எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும்.தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் அரசு ஈடுபட்டிருந்த வேளையில் தமது போர் யுக்திகளை முன்னெடுப்பதற்கும் இன்னும் பல்வேறு தேவைகளுக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளைத் தம்முடன் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு மேலதிக அமைச்சுக்கள் எனப் பல சலுகைகளை வழங்கித் தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினையை வளர்க்க முற்பட்டது.இன்றுதமிழ் மக்களுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் முடிவடைந்த நிலையில் பெரும்பான்மை இனத்தின் கழுகுப் பார்வையை முஸ்லிம் சகோதரர்கள் மீது திருப்பி முஸ்லிம்களின்வணக்கத்தலங்களை உடைப்பதும் குடியேற்றங்கள் தொடர்பில் இன ரீதியான கருத்துக்களை முன்வைப்பதும், துவேச மனப்பான்மையை வளர்ப்பதும் எதற்காக?

எனது நண்பரும் தமிழ்ப் பற்றாளருமான அமரர் அஷ்ரப் அவர்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து தந்தை செல்வா அவர்களின் விசுவாசியாக இருந்தவர். 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி புத்தளம் பள்ளிவாசலில் 06 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட போது அக்காலத்தில் நாட்டிலிருந்த எந்தவொரு முஸ்லிம் தலைமைப் பீடங் கூட கண்டனம் தெரிவிக்கவில்லை. தந்தை செல்வா அவர்கள் மாத்திரம் இவ் விடயம் சம்பந்தமாகக் கண்டனம் தெரிவித்து தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுடனான எமது ஒருமைப்பாட்டுக்கு வழிகோலும் காரணியாக இருந்தார். அது மாத்திரமன்றி 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தம்பி அஷ்ரப் அவர்கள் பங்கு பற்றியிருந்தார் என்று எனக்கு ஞாபகம்.

சுதந்திரத்தின் பின்பு அனேகமான முஸ்லிம் தலைவர்கள் தமிழரசுக் கட்சி வேட்பாட்டாளர்களாகப் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்கு சென்று தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வேறுபாடின்றி சேவையாற்றியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்த் துருவலும் போல இரண்டறக் கலந்தவர்கள், பிரிக்கவே முடியாதவர்கள் என்று கூறியவர் வேறுயாருமல்லர் காலஞ்சென்ற அமரர் அஷ்ரப் அவர்களே. மேலும் முஸ்லிம் மக்களில் பலர் தமிழ் மொழியில் மிக்க பாண்டித்தியமும், புலமையும் கொண்டவர்களாக திகழ்ந்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல. இன்றும் தமிழ் மொழியை மிகவும் நேசிப்ப வர்களாகவும் இச்செம்மொழியை மேம்படுத்துவதற்கு உழைப்பவர்களாகவும் உள்ளார்கள். எம்முடன் கிழக்கு முஸ்லிம் தமிழ் அறிஞர்கள் கொழும்பு கம்பன் கழக விழாவில் பங்கு பற்றி தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றி வரும் சேவைகள் மறக்க முடியாதன.

ஆனால் 1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதிகளின் பின்னர் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்களும் அரசியல் கருத்து வேற்றுமைகளும் எம் இரு சமூகத்தவர்களுக்கும் இடையில் இடைவெளியை உருவாக்கி விட்டன. இருந்த போதிலும் உரிய தேவையான சந்தர்ப்பங்களில் இயற்கையாகவே சகோதரர்களாக நாம் மாறி விடுவதை, ஒன்றுபட்டு நாம் உழைப்பதை, இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது.



மேற்கூறியவாறு ஏற்பட்ட சிலசம்பவங்கள்எம்மிடையில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை மறுக்க முடியாது. இருந்த போதிலும் தமிழ்த் தாயின் புதல்வர்கள் என்ற முறையில் முன்னர் எவ்வாறு, எப்படி ஒற்றுமையை நிலைநாட்டினோமோ அவ்வாறே இன்றும் வேறுபாடுகளைக் களைந்து எமது உரிமைகள்ஆட்சியாளர்களால் உதாசீனம் செய்யப்பட்டு பறிக்கப்படும் போது நாம் ஒன்றுசேர்ந்து ஏகோபித்த குரலோடு எமது கோரிக்கைகளை முன்னெடுக்கவும் வென்றெடுக்கவும் முன்வர வேண்டும்.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமை முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தமிழ் மக்கள் பேரவை தன்னாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவதுடன் சகல இனப் பாதுகாப்பிற்காகவும் நாம் அல்லும் பகலும் பாடுபடு வோம். எம்முடன் நீங்கள் அனைவரும் கட்சி பேதம் இன்றி, பிரதேசவாதம், வர்க்க பேதம் இன்றி, ஆண் பெண் பேதமின்றி, மத பேதமின்றி அரசின் தவறான நடவடிக்கைகளைக் கண்டிக்க முன் வர வேண்டும். தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரே அரசியல்த் தீர்வாக விளங்கக் கூடிய சமஷ்டி அரசியல் அமைப்பின் தேவையை வலியுறுத்த வேண்டும். முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சமஷ்டி அலகுவழங்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

எமது ஒற் றுமையைக் கிறிஸ்தவ, இந்துத் தமிழ் மக்களும்தமிழ்பேசும்இஸ்லாமிய மக்களும் உலகறியச் செய்ய வேண்டும். இதற்காக எமது குரல்கள் யாவும் ஒருமித்து ஓங்கி ஒலிக்கட்டும். வாழ்க தமிழ்! எழுக தமிழ்!- என்றார்.

★

காலைக்கதிர்



# ஜேர்மனி கலைத்திறன் போட்டி



கடந்த 27 ஆண்டுகளுக்கும் மேலாக ஜேர்மனியில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும், எமது கலை, பண்பாடுகளையும் தமிழாலயங்கள் ஊடாகப் போதித்துவரும் தமிழ்க் கல்விக் கழகம் தனது வளர்ச்சிப் படிகளில் மீண்டும் ஓர் அலகைப் புரட்டுகின்றது.

தமிழாலயங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தேர்வு, தமிழ்த்திறன் போன்ற முக்கிய நிகழ்வுகளின் ஊடாக மாணவர்களின் திறனுக்கு களம் அமைத்து அவர்களின் கல்வித் திறனில் உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் தமிழ்க் கல்விக்கழகம், இவ் வாண்டிலிருந்து தமிழாலய மாணவர்களிடையே புதிய கலைத்திறன் என்ற போட்டியை அறிமுகம் செய்துள்ளது. அந்தவகையில் 100 இற்கும் மேற்பட்ட தமிழாலயங்களில் பயிலும் பல்லாயிரம் மாணவர்களிடையே எமது நுண்கலைகளையும், கிராமியக் கலை வடிவங்களையும் சிறு வயதிலிருந்தே அறிமுகம் செய்து பயிற்றுவித்து வருகிறது.

இந்தப் போட்டி முதற் கட்டமாக தமிழாலய மட்டத்திலும் இரண்டாம் கட்டமாக மாநில மட்டத்திலும் நிறைவாக இறுதிச் சுற்று நாடு தழுவிய மட்டத்திலும் நடைபெறவுள்ளன.

தமிழாலயங்களின் போட்டிகள் நிறைவாகியுள்ள நிலையில் மாநிலங்களுக்கான போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

தென்மேற்கு மாநிலத்திலுள்ள 18 தமிழாலயங்களில் இருந்து 185 இற்கு மேற்பட்ட மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.

மாநிலப் போட்டிகளின் வரிசையில் இன்று 11 ஆம் திகதி மத்திய மாநிலத்துக்கான போட்டிகளும் நாளை 12 ஆம் திகதி வடமத்திய மாநிலத்திலும் 25 ஆம் திகதி வடமாநிலத்திலும் நடைபெறும். மாநிலப் போட்டிகள் நிறைவுபெற்ற பின் 18 ஆம் திகதி சனிக்கிழமை நாடு தழுவிய மட்டத்திலான இறுதிப்போட்டி மாநிலத்தின் மையப்பகுதியில் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# கனேடியத் தலைநகர் ஒட்டாவாவில் நடைபெற்ற தமிழ் மரபுத் திங்கள் விழா



ஒட்டாவா தமிழ் ஒன்றியம் ஒருங்கமைத்து நடத்திய தமிழ் மரபுத் திங்கள் விழா ஜனவரி 29 ஆம் திகதி ஒட்டாவாவில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பழந்தமிழர் பாரம்பரியத்தைப் பேணும் வண்ணம் நடன நிகழ்வுகள், இசை, சிலம்பம் போன்றனவும் இடம்பெற்றன.

கனேடியத் தேசிய கீதம், தமிழ் மொழி வாழ்த்து மற்றும் இலங்கையில் இடம்பெற்ற இனஅழிப்புப் போரில் உயிரிழந்தவர்களுக்கும், கனடாவின் சார்பாக போர்க் களங்களில் உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கும் ஒரு நிமிட அகவணக்கம் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வைத்தியர் துரைராஜா வரதராஜா கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில், போர்க் காலத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட மனித உரிமைமீறல்களையும், காயமடைந்த வேளை எவ்வாறு மருத்துவ உதவிகள் தமக்கு மறுக்கப்பட்டன என்பதையும் பகிர்ந்து கொண்டார்.

கனடாவின் அனைத்து அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் பெருமளவில் கலந்து கொண்டு நிகழ்வில் உரையாற்றியிருந்தனர். பேச்சாளர்கள் அனைவரும் கனடாவின் வளர்ச்சியில் கனேடியத் தமிழர்களின் காத்திரமான பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

நிகழ்வின் மேலும் ஒரு சிறப்பம்சமாக ரொரண்டோ, மிசிசாகா, பிரம்ரன் மொன்றியல், கோர்ன்வால் மற்றும் வன்கூவர் போன்ற நகரங்களில் இயங்கி வரும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

நிகழ்வில் கனடாவின் மாநகர, மாகாண, மத்திய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# கனடா தமிழர்களின் மரபுத் திங்கள் விழா





நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் தமிழர் மரபு திருநாள் விழா 200 இற்கு மேற்பட்ட பொது மக்களது ஆதரவுடன் கனடா பெரிய சிவன் கோயில் மண்டபத்தில் மிகக் கோலாகலமாக இடம் பெற்றது.

இந்த விழாவை நாடுகடந்த தமிழீழ அரசின் மரபுரிமைக் கானமையத்தின் தலைவரும், மேல் சபை உறுப்பினர்களில் ஒருவருமான இராசரெத்தினம் சுப்பிரமணியம் நேர்த்தியான திட்டமிடலுடன், மிகக் குறுகிய காலத்தில், மிக சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

மேல் சபை உறுப்பினர்களில் ஒருவரான திருமதி உஷா சிறீஸ்கந்தராஜா வந்தோரை வரவேற்கும் தமிழ் பண்பாட்டுக்கு இணங்க உபசரித்தார்.


தமிழர் மரபு அடையாளங்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தின் ஒருபுறம் தமிழர் மரபு சார்ந்த பொருள் காட்சியுடன் அரிய சில நூல்களும் மண்டபத்துக்குத் தனிச் சிறப்பை உருவாக்கின. அறுபது வருடங்களுக்கு மேலான அரசியல் அறிவுடன் நடமாடும் நூலகமாக 85 வயது ஈழ வேந்தன் ஐயா உற்சாகமாகப் பங்கேற்றார்.

அக வணக்கம், தேசிய கீதம், தமிழ்த் தாய் வாழ்த்து, வரவேற்று நடனத்தை தொடர்ந்து இராசரெத்தினம் சுப்பிரமணியம் வரவேற்பு உரை நிகழ்த்தினார்.

இந்த விழாவில் சந்திரகாந்தன் சிறப்பு விருந்தினராக சமுகம் அளித்து உரையாற்றினார். (ஐ)

# 21 ஆம் நூற்றாண்டில் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை

## பிரெஞ்சு நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு



21 ஆம் நூற்றாண்டில் உலக மக்கள்தம் சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பவர்களாக மாறும் நிலையில் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சாத்தியப்பாடுகள், எதிர்நோக்கும் சிக்கல்கள் ஆகியவற்றை ஆராயும் கருத்தரங்கு பிரெஞ் நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அனைத்துலக ஈழத் தமிழரவையின் அனுசரணையுடனும், பிரெஞ் நாடாளுமன்றத்தில் தமிழருக்கான ஆய்வு அமைப்பின் ஆதரவுடனும் பிரான்ஸ் தமிழீழ மக்களவையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கு பிற்பகல் இரண்டு மணியிலிருந்து மாலை ஆறு மணிவரை நடைபெற்றது. பிரெஞ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

அனைத்துலக ஈழத்தமிழரவையின் சர்வதேசத் தொடர்பாளர் திருச்சோதியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய பிரெஞ் நாடாளுமன்றத்தின் தமிழ் மக்களுக்கான ஆய்வுக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி மரி ஜோர்ஜ் பூபெட், இலங்கைத்தீவில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு அனைத்துலக விசாரணைப் பொறி முறை அவசியமானது என்பதை வலியுறுத்தினார்.

இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டுசெல்லுமாறு பிரெஞ்சு வெளிவிவகாரத் துறையிடம் தாம் கேட்டுக் கொள்ள இருக்கிறார் என அவர் கூறினார்.

இந்தக் கருத்தரங்கில் தாயகத்திலிருந்து கலந்து கொண்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இன்றைய தாயக நிலமை, சர்வதேச நாடுகளின் புவிசார் அரசியல் சார்ந்த நடவடிக்கைகள் போன்ற விடயங்களை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை விடயத்தில் அதிககவனம் செலுத்திவந்த மேற்குலகம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் முன்னைய அரசுக்கு வழங்கி வந்த அழுத்தங்களைக் கைவிட்டு புதிய அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டார். அத்துடன் தமிழ் மக்கள் விடயத்தில் முன்னைய அரசின் காலத்திலிருந்து தற்போதைய அரசு அதிகம் வேறுபடவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இன்னமும் கட்டமைக்கப்பட்ட ஓர் இனப்படுகொலையை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் புதிய அரசால் நல்லிணக்க முயற்சிகளுக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நடைபெற்ற போர்க்குற்றங்களுக்கு நீதி விசாரணை அவசியமில்லை என அண்மையில் குறிப்பிட்டார் என்பதையும் எடுத்துரைத்தார்.

அனைத்துலக ஈழத்தமிழரவையின் பேச்சாளர் ஸ்ரீபன் புஸ்பராஜா முடிவுரையை வழங்கினார்.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தியதுடன், இலங்கை தனது மனிதவுரிமைக் கடப்பாடுகளை நிறைவேற்றும் வரை ஐ.நா. ஒன்றியம் ஏற்றுமதி வரிச்சலுகைகளை வழங்கக் கூடாது என்ற வேண்டுகோளை முன்வைத்து இந்தக் கருத்தரங்கை நிறைவுசெய்தார்.



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 87

பொன்.வேணு கிருஷ்ணா

### இராணுவ பயிற்சியில் குறுகிய தூர ஏவுகணை, ரேடார் அமைப்புகளை பரிசோதிக்க ஈரான் திட்டம்

ஈரான் தன்னுடைய இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில், இந்தப் பயிற்சியின் போது அது தன்னுடைய குறுகிய தூர ஏவுகணை மற்றும் ரேடார் அமைப்புகளைப் பரிசோதிக்க உள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்தமையைத் தொடர்ந்து அதற்கு அடுத்த நாள் அங்கு இந்த இராணுவ பயிற்சிகள் நடைபெறுகின்றன.



தவறான நடவடிக்கையை எடுக்கும் எதிரி நாட்டின் மீது தங்களால் ஏவுகணையை மழைபோல பொழிய முடியும் என்று ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 29 ஆம் திகதி ஞாயிறன்று ஈரான் நடத்திய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை திட்டத்திற்கு பதிலடியாக புதிய பொருளா தாரத் தடைகளை விதித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும், தீவிரவாதத்துக்கு தொடர்ந்து ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது என்றும் அமெரிக்கா வர்ணித்துள்ளது.

### அமெரிக்காவிற்குள் நுழைய தடை: இடைநீக்கம் செய்த நீதிமன்றம், மேன் முறையீடு செய்துள்ள ட்ரம்ப் நிர்வாகம்

ஏழு முக்கிய முஸ்லிம் நாடுகளிலிருந்து வரும் மக்களை அமெரிக்காவிற்குள் நுழைய தடை செய்யும் அதிபர் ட்ரம்பின் முடிவை, மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என நீதிமன்றத்தில் அமெரிக்க அரசாங்கத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தடையை இடை நீக்கம் செய்த நீதிபதிக்கு, ட்ரம்ப் தனது அடுத்தடுத்த டீவிட்டுக்களில் கண்டனம் தெரிவித்துள்ளார்; மேலும் தடையை இடைநீக்கும் செய்வதால், தீய மற்றும் ஆபத்தானவர்கள் அமெரிக்காவிற்குள் வரக்கூடும் என்றும் எச்சரித்துள்ளார்.

இருப்பினும் முக்கிய விமான சேவை நிறுவனங்கள், தங்களின் விமானங்களில் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு செல்ல மக்களை அனுமதிக்கின்றன.

மேலும், அந்த போக்குவரத்து தடையை எதிர்த்து வொஷிங்டன், மியாமி மற்றும் பிற அமெரிக்க நகரங்களிலும், பல ஐரோப்பிய தலை நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

### 7 நாட்டு மக்கள் அமெரிக்கப் பயணத் தடை; அமெரிக்க நீதித்துறை மனு நிராகரிப்பு

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்திருந்த 7 நாடுகளின் மக்கள் மற்றும் அகதிகள் மீதான தடையை உடனடியாக மீண்டும் நடைமுறைப்படுத்த நீதித்துறை தாக்கல் செய்த வேண்டுகோளை, அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று மறுத்திருக்கிறது.

ட்ரம்ப் விதித்திருந்த தடைக்கு, சியாட்டல் நீதிபதி வழங்கிய தேசிய அளவிலான தற்காலிக இடைநிறுத்தத்திற்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்திருந்தது.

அரசின் இந்த மேல்முறையீட்டுக்கு, இந்த தடைக்கு எதிரானவர்கள் பதிலளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியுள்ளது

திங்கள் கிழமைக்குள்(06.02.2017) நீதித்துறை இதற்கு பதில் மனு தாக்கல் செய்ய வேண்டியிருந்தது.

தேசிய பாதுகாப்பு பற்றிய விடயத்தில் அதிபரின் முடிவைப் பற்றி, முடிவுக்குப் பிந்தைய கேள்விகளை இந்த தற்காலிக தடையை வழங்கியதன் மூலம் நீதிபதி எழுப்பியுள்ளார் என்று அவர் மீது ட்ரம்ப் நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### இடைநீக்கம் தொடர்வதால் அமெரிக்காவிற்குள் நுழையும் மக்களை கடுமையாக சோதிக்க ட்ரம்ப் உத்தரவு

ஏழு பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளில் உள்ள மக்கள், அமெரிக்காவிற்குள் நுழைய விதிக்கப்பட்ட




தடையின் இடைநீக்கம் தொடர்வதால், அமெரிக்காவிற்குள் நுழையும் மக்களை மிகக் கவனமாக சோதிக்கும்படி எல்லை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.




தடையை இடைநீக்கம் செய்த நீதிமன்றங்கள் அமெரிக்காவின் எல்லைகளை பத்திரப்படுத்துவதை கடினமாக்குகின்றன என்றும், இந்த தீர்ப்பை வழங்கிய நீதிபதி நாட்டை ஆபத்தில் தள்ளுகிறார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு நீதிபதியும், நீதிமன்ற அமைப்பும்தான் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று, பயணத் தடையை உடனடியாக மீண்டும் கொண்டுவர அமெரிக்க அரசால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்தது.

நீதித்துறை, தனது பதிலை தாக்கல் செய்யலாம். என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




54

## ஒப்பந்தம் தோல்வியுற்றதன் காரணங்கள்

தமிழீழ அரசியல் போராட்ட வரலாற்றில் ஓர் இருள் படர்ந்த காலப் பகுதியாகக் கட்டவிழ்ந்தது 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம். ஒக்ரோபர் 2 ஆம் நாள், பருத்தித்துறைக் கடற்பரப்பில் நிகழ்ந்த ஒரு சிறிய சம்பவம் இந்திய அரசின் கையாலாகாத் தனத்தாலும், சிங்கள அரசின் இனவெறிப் போக்காலும் பேரவலமாக மாறியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோருடன் பதினைந்து உயர்மட்டப் புலி வீரர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி விமானத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில், இந்திய அமைதிப் படைத் தலைமையுடனும் இந்தியத் தூதுவருடனும் பேச்சு நடத்தி, கைதாகிக் காவலில் வைக்கப்பட்டிருந்த எமது தளபதிகளையும் மூத்த உறுப்பினர்களையும் மீட்டெடுக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியத் தூதுவர் டிக்சிட் அவ்வேளை புதுடில்லியில் இருந்தார். நிலைமை பாரதூரமானது என அறிவிக்கப்பட்டதும் அவர் தனது விடுமுறையை ரத்துச் செய்து விட்டு அவசர அவசரமாக கொழும்பு வந்து சேர்ந்தார். பலாலியிலுள்ள இந்திய இராணுவத் தலைமையகத்திலிருந்து டிக்சிட்டுடன் தொலைபேசியில் கதைத்த போது அவர் என்னைப் பதற்றப்பட வேண்டாம் என ஆறுதல் கூறினார். இந்தப் பிரச்சினையை உடனே தீர்த்து வைக்கலாம் என்றும் கைதாகித் தடுத்து வைக்கப்பட்ட தளபதிகளும் போராளிகளும் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்றும் அவர் உறுதியளித்தார். நிலைமை மோசமடையுமென நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அந்த நேரத்தில் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தது. சிங்கள ஆயுதப் படைகள் முகாம்களுக்குள் முடங்கியிருந்தன. தமிழர் தாயகத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு இந்திய அமைதிப் படைகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் விடுதலைப் புலிகளின் மாவட்டத் தளபதிகள் என்ற ரீதியில் குமரப்பாவும் புலேந்திரனும் இந்திய இராணுவ அதிகாரிகளுக்குப் பழக்கமானவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய-இலங்கை ஒப்பந்த விதிகளுக்கு அமைய தமிழ்ப் போராளிகளுக்கு அரச அதிபரால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த அமைதிச் சூழ்நிலையில் எதுவித குற்றமும் புரியாத, போர்நிறுத்த விதிகளையும் மீறாத எமது போராளிகளைக் கைது செய்து, தடுத்து வைப்பது நியாயமற்றது. இதன் அடிப்படையில்தான் எமது போராளிகளுக்கு எவ்வித ஆபத்தும் நேர்ந்துவிடாது எனக் கருதினேன்.

பலாலி விமானத் தளத்தில் இந்தியத் தூதரின் தொலைபேசிப் பதிலுக்காக காத்து நின்ற போது இந்திய அமைதிப் படைகளின் தளபதி ஜெனரல் ஹக்கிரட் சிங் என்னைத் தனது செயலகத்துக்கு அழைத்தார். அவர் எனக்கு ஏற்கனவே நன்கு பழக்கமானவர். எமது தளபதிகளையும் போராளிகளையும் சிறைவைத்திருப்பது அநீதியானது, அவர்களுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு இந்திய அமைதிப் படைத் தலைமைப் பீடமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று இந்தியத் தளபதியுடன் வாதாடிய நான், எம்மவரை உடன் விடுவிக்குமாறு அவரிடம் மன்றாட்டமாகக் கேட்டேன்.







வழமையாக கலகலப்பாகவிருக்கும் ஹக்கிரட் சிங் அன்று முகத்தைத் தொங்கப் போட்டபடி இருந்தார். அவரது பார்வையில் ஓர் இனம்தெரியாத சோகமும் கவலையும் தொனித்தன. எமது போராளிகளின் நிலைகுறித்துத் தனது தனிப்பட்ட வேதனையைத் தெரிவித்த அவர், இவ்விடயத்தில் ஜெயவர்த்தனா கடும்போக்கை எடுக்கிறார் எனவும், ஒரு சிறிய பிரச்சினையை பெரும் அரசியல் நெருக்கடியாக, அவர் மாற்ற முனைவதாகவும் அரச அதிபர் மீது பழி சுமத்தினார் ஹக்கிரட் சிங். எமது போராளிகளைக் கைது செய்த சிங்களக் கடற்படை, அவர்களைப் பலாலித் தளத்திலுள்ள சிங்கள இராணுவப் படையணியிடம் ஒப்படைத்திருக்கின்றது எனவும், அப்படையணி தேசியப் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்றி அவர்களை விடுதலை செய்ய மறுக்கின்றது எனவும் சொன்னார். ஹக்கிரட் சிங் கூறிய இன்னொரு விடயம் எனக்கு ஏக்கத்தைக் கொடுத்தது. எமது போராளிகளை விசாரணைக்காக கொழும்புக்கு விமானத்தில் கொண்டு செல்லும் இரகசியத் திட்டம் ஒன்று இருக்கின்றது என சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி தன்னிடம் கூறினார் எனவும் அவர் சொன்னபோது எனக்கு இதயம் கனத்தது. எனது முகம் திடீரென இருண்டு போனதை அவதானித்த இந்திய இராணுவத் தளபதி, எல்லாமே ஜெயவர்த்தனாவினதும் இந்தியத் தூதுவரதும் கைகளில் தங்கியிருக்கின்றன எனக் கூறினார்.

எமது போராளிகளை விசாரணைக்காக கொழும்புக்கு விமானத்தில் கொண்டு செல்லும் இரகசியத் திட்டம் ஒன்று இருப்பதாகச் சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி தன்னிடம் கூறினார் எனவும் அவர் சொன்னபோது எனக்கு இதயம் கனத்தது. எனது முகம் திடீரென இருண்டு போனதை அவதானித்த இந்திய இராணுவத் தளபதி, எல்லாமே ஜெயவர்த்தனாவினதும் இந்தியத் தூதுவரதும் கைகளில் தங்கியிருப்பதாகக் கூறினார்.

இந்திய அமைதிப் படைத் தளபதியின் அனுமதியுடன் இந்திய இராணுவ அதிகாரியான கேணல் பெர்னான்டஸ், எமது போராளிகளைத் தடுத்து வைத்திருக்கும் இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றார். சிறிலங்கா இராணுவத்தின், பலத்த பாதுகாப்புடன் அமையப்பெற்ற பகுதி அது. அங்குள்ள கட்டடம் ஒன்றில் எமது போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தரையில் அவர்கள் அமர்ந்திருக்க அவர்களைச் சூழ, ஆயுதபாணிகளாக, துப்பாக்கி முனைகளை அவர் மீது திருப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்கள் சிங்கள இராணுவத்தினர். அவர்களது முகங்களில் கடுப்பும் வெறுப்பும் தெரிந்தன. அங்கு நின்ற சிங்கள இராணுவ அதிகாரியிடம் கேணல் பெர்னான்டஸ் கதைத்ததை அடுத்து, போராளிகளைச் சந்திக்க எனக்கு அனுமதி கிடைத்தது.

குமரப்பா, புலேந்திரன் மற்றும் எமது போராளிகள் சிரித்த முகத்துடன் என்னை வரவேற்றனர். எந்த விதமான அச்சமோ, அங்கலாய்ப்போ அவர்களிடம் காணப்படவில்லை. தங்களுக்கு வெகுசீக்கிரமாக விடுதலை கிட்டிவிடும் என்ற நம்பிக்கையோடு இருந்தார்கள். புதிதாகத் திருமணமாகிய தமது மனைவிமாருக்கு ஆறுதல் கூறும்படி குமரப்பாவும், புலேந்திரனும் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இம்மூத்த தளபதிகள் இருவருடனும் எனக்கு நீண்டகால நட்பு இருந்ததாலும் இவர்களது காதல் திருமணத்தை நடத்தி வைத்ததில் நான் முக்கிய பங்கு வகித்ததாலும், அவர்களது குடும்பங்களுடன் எனக்கு நெருங்கிய உறவு இருந்தது. அன்றிரவே அவர்களது மனைவிமாரைச் சந்தித்து ஆறுதல் கூறுவேன் எனச் சொன்னேன். அவர்களது நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாக எதையுமே கூறி அவர்களது மனநிலையைக் குழப்பிவிட நான் விரும்பவில்லை. அவர்களது விடுதலையைப் பெற்றெடுக்க இந்தியத் தூதுவர் டிக்சிட் கடும் முயற்சி எடுத்து வருகிறார் எனச் சொன்னேன். நாளை காலை மீண்டும் பலாலிக்கு வந்து, டிக்சிட்டுடன் தொலைபேசியில் கதைத்த பின்பு அவர்களுக்குத் தகவல் தெரிவிப்பேன் எனக் கூறினேன். ஒரு மணிநேரம் வரை அவர்களுடன் உரையாடிவிட்டு, அவர்களைப் பிரிந்து சென்றபோது விவரிக்க முடியாத துயரமும் ஏக்கமும் நெஞ்சத்தை அழுத்தின.

(தொடரும்...)

## ஐநூறு கோடி ரூபா செலவில் அம்பாந்தோட்டையில் சிறைச்சாலை



அம்பாந்தோட்டை, பெப்.11

அம்பாந்தோட்டை அகுனுகொலபெலச என்ற பகுதியில் 58 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ஐந்நூறு கோடி ரூபா செலவில் நவீன சிறைச்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி இந்தச் சிறைச்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன இரண்டாயிரம் கைதிகளை அங்கு சிறை`வைக்கும் வசதி காணப்படுகின்றது.

இந்தப் புதிய சிறைச்சாலையில் ஒரு வைத்தியசாலை, தொழிற்கல்வி பயிற்சி மையம், கைத்தொழிலுக்காக தனியான கட்டடம், அதிகாரிகளுக்காக 140 தங்குமிடங்கள், 4 ஆயிரம் மீற்றர் நீளமான ஓடுபாதை, 25 மீற்றர் நீளமுடைய உள்ளரங்க நீச்சல்குளம் மற்றும் சிறைக் கைதிகளால் வடிவமைக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஆகியன அங்கு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 11.02.2017

**துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு தைத்திங்கள் 29ஆம் நாள் பிரதமை பி.இ 5.04 வரை. பின் துவிதீயை. ஆயிலியம் காலை 8.54 வரை. பின்மகம். மரணயோகம் காலை 8.54 வரை. பின்சுபயோகம். ராகுகாலம்: பகல் 9.28 முதல் 10.56 வரை. சுபநேரம் : மாலை 3.30 முதல் 5.00 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத தேய்பிறை பிரதமை.**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** அலைச்சல் மிகுந்த நாள். சிலர் கொடுத்த பணத்தை திரும்பப் பெற அலைந்து திரிவார்கள்.

**ரிஷபம்:** விருத்தியான நாள். பணவரவு அதிகரிக்கும். கலைஞர்களின் திறமை பளிச்சிட்டு புகழும், பொருளும் கிடைக்கும்.

**மிதுனம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு நல்ல விற்பனை மூலம் எதிர்பார்க்கும் வருமானம் கிடைக்கும்.

**கடகம்** : அதிஷ்டமான நாள். சிலருக்கு அதிகாரம் உள்ள பதவி, சம்பள உயர்வுடன் கிடைக்கும். மந்தமாக நடந்து வந்த தொழிலில் சுறுசுறுப்பு ஏற்படும்.

**சிம்மம்:** யோசனை நிறைந்த நாள். மனதில் இனம் புரியாத கவலை உண்டாகும். வீண் அலைச்சல்களால் மனம் சோர்வடையும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்ப்பது நன்று.

**கன்னி:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு விரும்பிய உயர் பதவி கிடைக்கும் சொந்த வீடு வாங்கும் யோகம் உண்டு.

**துலாம்:** விருத்தியான நாள். செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படும். சுயதொழிலில் ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நன்மையான நாள். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவும், சலுகைகளும் கிடைக்கும். சிலர் ஆன்மீக ஈடுபாட்டால் புண்ணியஸ்தல யாத்திரையை மேற்கொள்வார்கள்.

**தனுசு:** துன்பமான நாள். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உடலாரோக்கியம் குன்றும். உத்தியோகத்தர்களுக்கு கடும் உழைப்பால் உடல் சோர்வடையும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் அதிக உழைப்பும், அலைச்சலும் உண்டாகும். உறவினர்களால் செலவும், சிரமமும் உண்டாகும்.

**கும்பம்:** அதிஷ்டமான நாள். தொழிலில் துரிதமான செயற்பாடும், நல்ல வருவாய், லாபங்களும் ஏற்படும். பிரயாணங்களால் நன்மை உண்டாகும்.

**மீனம்:** புகழ்மிக்க நாள். சமூகத்தில் உயரிய அந்தஸ்து கிடைக்கும். தொழில் பார்க்கும் பெண்கள் சம்பள உயர்வை பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் நற்கருமங்கள் ஆரம்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

# மலையக மக்களுக்கு உரிமைகள் தேவை இதற்காகவே மைத்திரியை ஆதரித்தோம்

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

தலவாக்கலை, பெப்.11

மலையக மக்களுக்கு காணி, தனி வீடு, கல்வி, சுகாதாரம் ஆகிய வசதிகளை ஏற்படுத்தி கொள்ளவே 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவு வழங்கியது.

இதனடிப்படையில் மலையகத்தில் கல்வி, சுகாதாரம், காணி, தனி வீடு என்பன நிறைவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலை நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''இன்று மலையகத்தில் தனி வீடுகள் அமைத்துத் தோட்டத் தொழிலாளர்களை லயன் வாழ்க்கை முறையிலிருந்து விடுவிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பூரண ஒத்துழைப்பை வழங்கினார்.

அனைவரும் விரும்பத்தக்க இந்தத் திட்டம் அமைச்சர் பழனி திகாம்பரத்தின் ஊடாக பெரியளவில் முன்னேற்றமடைந்து வருவதுடன், தனி வீட்டு கனவு நனவாக்கப் பட்டும் வருகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியான நாங்கள் நினைத்திருந்தால் தேர்தல் காலத்தில் ஜனாதிபதியிடமோ அல்லது பிரதமரிடமோ ஒரு தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டு மலையக மக்களுக்குச் சேவை செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவ்வாறு நாங்கள் நினைக்கவில்லை.


எனவேதான் இன்று எமது மக்களுக்குத் தனி வீடுகள்



கிடைத்திருக்கின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் 2 தேசிய பாடசாலைகள் அமைய இருக்கின்றன. 25 பாடசாலைகள் கணித, விஞ்ஞான பாட பாடசாலைகளாக உருவாகவுள்ளன. இவ்வாறான பல வேலைத் திட்டங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

முதல் முறையாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அழைப்பை ஏற்று வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மலையக மக்கள் சார்பாகவும், த.மு.போ கூட்டணி சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''- என்றார். (எ)



மலையக பெருந்தோட்டப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது கிராமத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். நுவரெலியா மாவட்டத்தில் அக்கரபத்தனை ஊட்டுவில் தோட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 150 தனித்தனி வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அவற்றில் முதற்கட்டமாக 71 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதனை ஜனாதிபதி பயனாளிகளிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

# இலங்கையர் அனைவரும் சமமான உரிமைகளை அனுபவிக்கவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு, பெப்.11

''வடக்கு, கிழக்கு உட்பட இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் இலங்கையர்களே என்ற ரீதியில் அனைவரும் சமமான உரிமைகளை அனுபவிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்''

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறினார்.

இலங்கை பல்வேறு இன மக்களை கொண்ட நாடு என்பதால் இனங்களுக்கு இடையில் சமாதானத்தையும், ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மலையக மக்களுக்குத் தனி வீடுகள் கிடைக்க வேண்டும் என்பது தனது 20 வருடக் கனவு என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இன்று அந்தக் கனவு நிறைவேற்றப்படுவது தொடர்பாகத் தான் மகிழ்ச்சி அடைகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

தலவாக்கலை நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் லயன் முறை வாழ்க்கையிலிருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவே 1994 ஆம் ஆண்டு எனது அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு என்ற புதிய அமைச்சை உருவாக்கினேன்.

மறைந்த மலையகத்தின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கீழ் இந்த அமைச்சு இயங்க நான் வழிவகுத்திட்டேன். மலையக பெருந்தோட்ட பகுதியில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்குத் தனி வீடுகளை அமைப்பதற்காக எனது அரசாங்க காலத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால் தனி வீடுகளை அமைப்பதற்கு காணிகள் பெறுவதில் சிக்கல்கள் இருக்கின்றன என அன்றைய அமைச்சர்கள் என்னிடம் தெரிவித்தனர். ஆகையால் பெருந்தோட்ட நிர்வாகங்களை நிர்வகிக்கும் நிறுவனத்திடம் கலந்துரையாடிக் காணிகளும் பெற்றுக்கொள்ள வழி வகுக்கப்பட்டது. ஆனால் வீடுகள் கட்டப் படவில்லை.

இன்று இந்த அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் பழனி திகாம்பரத்தின் ஊடாக தனி வீடுகள் அமைக்கும் திட்டம் நிறைவேற்றம் அடைந்து வருகின்றது. அதன் படி 20 வருடங்களுக்கு அதிகமான காலப் பகுதியில் என்றோ ஒருநாள் நான் கண்ட கனவு இன்று நனவாகிறது. என்றார். (ம)

# கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு போராட்டங்களுக்கு பலம் சேர்க்கும் பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை

புதுக்குடியிருப்பு பெப்.11

கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் தமிழ் மக்கள் - எமது உறவுகள் மண் மீட்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை பெரும் அதரவை வழங்குகிறது.

இந்த விடயம் தொடர்பாக பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ மக்களின் 6 தசாப்தங்களுக்கு மேலான உரிமைப் போராட்டத்துக்கும், உயிரிழப்புக்கும், காயத்துக்கும் மருந்தும் பண உதவியும் செய்தால் போதும் என்ற சிங்கள பேரினவாத அரசுகளின் மனப் போக்கும், ஏமாற்றும் யுக்தியும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரை காலாகாலமாக அனுபவரீதியாக கண்டுகொண்டதொரு உண்மையாகும்.

ஆனாலும், தமிழீழ மக்களின் நியாயமான தீர்வுக்குச் சர்வதேசம் ஒரு நாள் வழிசெய்யும், செய்ய வேண்டும் என்கின்ற நம்பிக்கையோடு களத்திலும் அதனைத் தொட்டு புலத்திலும் எமது மக்கள் தமது ஜனநாயகப் போராட்டத்தைப் பல்வேறு வழிகளில் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, தாயகத்தின் அன்றைய இன்றைய உண்மை நிலவரங்களை சர்வதேசத்துக்குத் தொடர்ந்தும் எடுத்துச் சொல்ல வேண்டிய காலச் சூழலில் அவற்றை மறுதலித்து, எம்மவர்களையே எமக்கெதிரான சாட்சியங்களாக்கி உண்மைகளை மூடி மறைத்து எமது இனத்தின் தியாகங்களையும், உயிர் அர்ப்பணிப்புக்களையும் மறந்து சிங்கள அரசின் தமிழின விரோதச் செயற்பாட்டுக்குத் துணை போய் ஆட்சியை மாற்றுவோம், புதிய அரசமைப்போம், அதிகாரத்தைப் பெறுவோம் என்ற வாக்குகளுடன் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அரச பீடமேறிய ஆக்கிரமிப்பாளர்கள், தொடர்ந்தும் அநியாய வழியிலேயே சிங்கள அரசுகள் சென்று கொண்டிருக்கின்றன.

''கடல் வற்றட்டும் இரை கிட்டும் என்று உடல் மெலிந்து இறந்ததாம் கொக்கு'' என்பது போலல்லாது, எமது மக்கள் தன்மானத்தை இழந்து போகாது தமது உரிமையை மீட்பதற்காக மக்கள் போராட்டமாக அது பற்றியெரிந்து கொண்டிருக்கின்றது. கடந்த 31 ஆம் மிகதி கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் இருந்து சிங்கள இராணுவமும், கடற்படையினரும் வெளியேறி தமது இயல்புவாழ்வுக்குத் திரும்ப வழியேற்படுத்த வேண்டும் எனவும் சிங்கள அரசு சர்வதேசத்திடம் வழங்கிய உறுதிமொழிக்க மைய நடக்க வேண்டும் என்றும் கூறிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மக்களுக்குரிய தீர்வு கிட்டும்வரை சிங்கள அரசுக்குக் கொடுக்க இருக்கும் வரிச் சலுகையை நிறுத்த வேண்டும்.

ஐ.நா. மனிதவுரிமைகள் செயலகம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த நிலையில் அவர்களது ஜனநாயகப் போராட்டத்துக்கு அனைத்து மக்களும் கரம் கொடுக்க வேண்டும்.

தற்பொழுது கேப்பாபிலவு மக்கள் சிறுவர்கள் முதல் பெரியவர்கள், முதியவர்கள், பெண்கள் வண. பிதாக்கள் கட்சி பேதமற்று அரசியல் பிரமுகர்கள், மனிதநேயக் கட்டமைப்புகள் முன்னெடுத்திருக்கும் அரசியல் கவனவீர்ப்பு போராட்டத்துக்கு பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்கள் நாம் பலம்சேர்ப்போம்-குரல்கொடுப்போம்.

இன்று உருப்பெற்று நிற்கும் கேப்பாபிலவையும், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய இடங்களையும் சேர்ந்த பல்லாயிரம் மக்கள் பிரான்சில் வாழ்கின்றனர். எமது நிலம் எமக்கு வேண்டும் என்று நாம் எல்லோரும் சேர்ந்தே குரல் கொடுப்போம்.- என்றுள்ளது. (ஐ)

## ஆன்மீகப் பயிற்சி

இணுவில், பெப்.11

இணுவில் சைவத்திருமுறைப் பயிற்சி மையத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை சைவ சித்தாந்த திருமுறைப் பயிற்சி வகுப்புக்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.11

நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அரச புகைப்பட விழா, அரச ஓவிய சிற்ப விழா, அரச இலக்கிய நூல் விருது வழங்கல் ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் பெற்றுக் கொள்ள முடியும். (ச)

## மெய்வன்மைப் போட்டிகள்

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தொழிலதிபர் த.ஜெயந்தனும், சிறப்பு விருந்தினர்களாகக் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் சூ.ரவீந்திரா, பாடசாலை பழைய மாணவி திருமதி த.மங்கையற்கரசி ஆகியோரும் கலந்து கொள்வர்.

***

புத்தூர் பஞ்சசீக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி சிவரஞ்சனி கணேசாணந்தன் தலைமையில் நடைபெறும்.


இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்வார். (ச)

# இருபாலை குடிதண்ணீர்த் திட்டம் இலக்கை வெல்ல ஒத்துழையுங்கள்

### மக்களிடம் கோருகிறார் வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் ஜெலீபன்

யாழ்ப்பாணம், பெப்.11

இருபாலை குடிதண்ணீர்த் திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன்.






வலி.கிழக்குப் பிரதேச சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியின் நிர்மாணப் பணிகள் முழுமைபெற்று வரும் நிலையில் இருபாலை கிழக்கு மக்களுக்கும் பிரதேச சபையின் செயலாளருக்குமிடையிலான கலந்துரையாடல்கள் ஒன்று புதன்கிழமை மாலை இருபாலை கிழக்கு வி.ஏச் வீதியில் அமைந்துள்ள விக்னேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் கதிரொளி சனசமூக நிலையங்களில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர்தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

ஆரம்ப காலங்களில் குடி தண்ணீரை பவுஸர் மூலமாகவே எடுத்து வந்து வழங்கியிருந்தோம். பவுசர் மூலமான குடி தண்ணீர் வழங்கலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குச் சபையினரும் பொதுமக்களும் முகம் கொடுக்க நேர்ந்திருந்தது.

இப்போது மாகாண விசேட நன்கொடைத் திட்டத்தின் மூலமாக எண்பது இலட்சம் ரூபா செலவில் புதிதாக தண்ணீர்த் தொட்டி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எண்பது இலட்சம் ரூபா என்பது எமது சபையைப் பொறுத்தளவில் மிகப் பெருந்தொகையாகவே பார்க்கின்றோம்.

ஆகவே இந்தத் திட்டத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி, திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். குடிதண்ணீரை வீண் விரயம் செய்யாது பயன்படுத்த வேண்டும்.

தற்சமயம் பரீட்சார்த்தமான குடிதண்ணீர் வழங்கல் இடம்பெற்று வருகிறது. எஞ்சியுள்ள வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனார் உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

திறக்கப்பட்ட பின்னர் குடி தண்ணீருக்கு ஒரு சீரான கட்டண அறவீடு அறிமுகப்படுத்தப்படும். சேவையை நோக்கமாகக் கொண்டு செயலாற்றும் நிறுவனங்கள் என்ற ரீதியில் கட்டண அறவீடானது மிக மிகக் குறைந்த தொகையைக் கொண்டதாகவே கணிக்கப்படும்.- என்றார்.

கோப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி வா.கனகராசா, அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான த.பிருந்தாபன், இ.நீதிபன் மற்றும் இருபாலை கிழக்கு விக்னேஸ்வரா மற்றும் கதிரொளி வாசிகசாலையின் உறுப்பினர்களும் பயனாளிகளும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

## இளையோர் மாநாடு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான மாநாடு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் சுமார் 3 ஆயிரம் இளைஞர், யுவதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து அவர்களிடத்தில் தலைமைத்துவ பண்புகளை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்கான தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. (ஐ-21)

# யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, பெப்.11

யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

2011 முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் 11 ஆயிரத்து 582 சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குச் சுற்றலா சென்றுள்ளனர்.

2014 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 25 ஆயிரத்து 580 சுற்றுலாப் பயணிகள் சென்றுள்ளனர். இந்த நிலையில், 2016 ஆம் ஆண்டில் மேலும் அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றுள்ளனர் என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஐ)

## சசிகலாவுக்கு தடைவிதிக்கக் கோரும் மனுவை அவசரமாக விசாரிக்க முடியாது

### உச்ச நீதிமன்றம் நேற்றுத் தெரிவிப்பு

டில்லி, பெப்.11

சசிகலா தமிழக முதல்வராகப் பதவியேற்கத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அவசர வழக்காக விசாரிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

சசிகலா தமிழக முதல்வராக பதவியேற்பதற்கு இடைக் காலத்தடை விதிக்க வேண்டும் என்று சட்ட பஞ்சாயத்து இயக்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சிறைக்குச் சென்றனர். அப்போது தமிழ்நாடு முழுவதும் கலவரங்கள் ஏற்பட்டன. அந்த வழக்கில் விடுதலையாகியுள்ள நிலையில் அதற்கான மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்குக்கான தீர்ப்பு விரைவில் வெளியாகும் வாய்ப்புள்ளது.

சசிகலா முதல்வராகப் பதவி யேற்ற பின்பு சொத்துக் குவிப்பு வழக்குக்கான தீர்ப்புச் சசிகலாவுக்கு எதிராக வரும் பட்சத்தில் அவர் மீண்டும் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

இதனால் மீண்டும் தமிழகத்தில் கலவரம் வெடிக்கும் வாய்ப்பு உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு சொத்துக்குவிப்பு வழக்குக்கான தீர்ப்பு வரும் வரை சசிகலா முதல்வராக இடைகாலத்தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி நேற்று மறுத்து விட்டார். (எ)


## அ.தி.மு.க.எம்.எல்.ஏக்கள் எங்கே? பதிலளிக்க உயர்நீதிமன்று உத்தரவு

### தமிழக அரசு, டி.ஜி.பி, பொலிஸ் ஆணையாளர் ஆகியோருக்கு காலக்கெடு

சென்னை, பெப்.11

அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் எங்கு இருக்கின்றனர், அவர்கள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளார்கள் என்பது தொடர்பில் எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் தமிழக அரசு, தமிழக டி.ஜி.பி. மற்றும் மாநகர பொலிஸ் ஆணையாளர் ஆகியோர் பதிலளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிருஷ்ணராயபுரம் தொகுதி பெண் சட்டசபை உறுப்பினர் கீதாவைக் காணவில்லை என்று அவரது உறவினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்துள்ளார். இதேபோன்று குன்னம் தொகுதி சட்டசபை உறுப்பினர் ஆர்.டி. ராமச்சந்திரனைக் காணவில்லை என்று அந்தத்தொகுதி வாக்காளர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.



அந்து மனுக்கள் மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. அப்போது, கிருஷ்ணராயபுரம் தொகுதி பெண் சட்ட சபை உறுப்பினர் கீதா, குன்னம் தொகுதி சட்டசபை உறுப்பினர் ராமச்சந்திரன் ஆகியோரது உறவினர்கள் தொடர்ந்த வழக்கில் அவர்கள் இருவரையும் சேர்த்து ஏனைய சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் எங்கு இருக்கிறார்கள் என்பது குறித்து எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் தமிழக டி.ஜி.பி, மாநகர பொலிஸ் ஆணையாளர் மற்றும் தமிழக அரசு, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா ஆகியோர் பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய அரசியல் பரபரப்பில் இந்தச் செய்தியும் பரபரப்பான தகவல்களுக்கு வலுச்சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மெய்ப்பாதுகாவலர்களை நியமித்தார் பன்னீர்செல்வம்

சென்னை, பெப்.11

தமிழக அரசியலில் தற்போது நிலவி வரும் பரபரப்புச் சூழ்நிலைகளுக்கு மத்தியில், தனிப்பட்ட பாதுகாப்புக்காக, 10 இற்கும் அதிகமான மெய்ப்பாதுகாவலர்களை முதல்வர் பன்னீர் செல்வமே நியமித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா முதல்வராவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முதல்வர் பன்னீர்செல்வம் போராட்டத்தில் குதித்துள்ளார். இந்த நிலையில், அ.தி.மு.க. பிரமுகர்கள் மட்டுமின்றி, பல்வேறு கட்சியினரும், பொது மக்களும் தினமும் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள பன்னீர்செல்வத்தின் இல்லத் துக்கு நேரில் சென்று ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து தினமும் சசிகலாவின் தரப்பினரிட மிருந்து பன்னீர் செல்வத் துக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. இதனால், இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், பன்னீர் செல்வத்தின் வீட்டுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, தனிப்பட்ட பாதுகாப்புக்காக, 10 இற்கும் அதிகமான மெய்ப்பாதுகாவலர்களை பன்னீர் செல்வமே நியமித்துக் கொண்டுள்ளார்.

பொலிஸார், சசிகலாவின் பேச்சைக் கேட்டு தனக்கு எதிராக எந்நேரமும் திரும்பி விடலாம் என்பதால், தனக்கு நெருங்கிய விசுவாசமான நபர்களை பன்னீர்செல்வம் பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)



உலகக் புகழ்ப்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் நேற்று மிகச் சிறப்பாக ஆரம்பமாகின. தமிழகம் முழுவதிலிருந்து சினிமா மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த பலரும் அங்கு திரண்டனர். 950 காளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1400 இற்கும் மேலான மாடுபிடி வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். மாவட்ட ஆட்சியாளர் வீரராகவராவ் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

## ஒரு ரொக்கட்டில் 105 செயற்கைக் கோள்கள் விண்ணுக்கு அனுப்பவுள்ளது இஸ்ரோ


மதுரை, பெப்.11

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ அமைப்பு ஒரு ரொக்கெட்டில் 105 செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவ உள்ளது என அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழிலக கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.) சார்பில் மதுரையில் தொழில்நுட்ப கருத்தரங்கு நடைபெற்றது. இதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) இயக்குநர் வெங்கட கிருஷ்ணன் பங்கேற்று பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்;

''கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. அதேபோல தொழில் நிறுவனங்களுடன் கூட்டுத்திட்டங்களையும் இஸ்ரோ செயற்படுத்தி வருகிறது.



பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் அன்றாட நடவடிக்கைகள், பல இணையத்தளம்வாயிலாகமுன்னேறிக் கொண்டு இருக்கின்றன. அதற்கேற்ப தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டியது அவசியம்.

இதைக் கருத்தில் கொண்டு தகவல் தொடர்புக்கான செயற்கைக் கோள் பலவற்றை இஸ்ரோ அனுப்பி வருகிறது.

இஸ்ரோவின் வரலாற்றுச் சாதனைகளில் முக்கியமாக எதிர்வரும்15 ஆம் திகதி ஒரு ரொக்கெட்டில் 105 செயற்கைக் கோள்களை அனுப்ப உள்ளது.

இந்திய தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எனினும் சமீபத்தில் ஏற்பட்ட பண மதிப்பிழப்பில் தொழில் துறைக்கு பாதிப்பு ஏற்படவில்லை. இருப்பினும் உலக அளவில் இந்தியாவுக்கான உற்பத்திகள் அதிக அளவில் வரவேண்டும்.'' -என்றார். (எ)

## யார் ஆட்சி அமைப்பது? ஆளுநரே முடிவெடுப்பார்

### மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

டில்லி, பெப்.11

தமிழகத்தில் யார் ஆட்சி அமைப்பது என்பது குறித்து ஆளுநரே முடிவு செய்வார் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க.வின் சட்டமன்றக் கட்சித் தலைவராக சசிகலா தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து அவர் தமிழகத்தின் பொறுப்பு ஆளுநரான வித்யாசாகர் ராவைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார். மேலும், சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்தையும் அளித்துள்ளார்.

அதேபோல் பதவி விலகும் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் ஆளுநரைச் சந்தித்துப் பேசியுள்ளார். அவர்களில் யாரை ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பார் என்பது இரகசியமாகவே உள்ளது.

இந்தநிலையில் ஆளுநர் வித்யாசாகர் ராவ் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் தொலைபேசியில் பேசி ஆலோசனை நடத்தினார். ஆளுநர் சார்பில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு அறிக்கையும் அனுப்பப்பட்டது.



இந்த அறிக்கையை ஆய்வு செய்த மத்திய அமைச்சர் தமிழகத்தில் நிலவும் அரசியல் நிலைவரம் குறித்த தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் லக்னோவில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-

தமிழக அரசியல் நிலைவரம் குறித்து ஆளுநரே முடிவு எடுப்பார். மாநிலத்தில் அரசமைப்புச் செயற்பாட்டுக்கு ஆளுநர்தான் தலைவர் என்பதால் தமிழகத்தில் யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற முடிவை ஆளுநரே எடுப்பார்.- என்றார். (எ)

## மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்ட ஒன்றரை லட்சம் கோடி ரூபா தேவை



வொஷிங்டன், பெப்.11

மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைப்பதற்கு இந்திய நாணயப்படி ஒன்றரை லட்சம் கோடி ரூபா செலவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

மெக்சிக்கோ எல்லையில் இருந்து அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவும் நபர்களைத் தடுக்க எல்லையில் சுவர் கட்டப்படும் என்று புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். தனது பிரசாரத்தின்போது இந்தக் கருத்தை வலியுறுத்தியமையுடன் அதனை, தேர்தல் வாக்குறுதியாகவும் வெளியிட்டார்.

தற்போது அவர் ஜனாதிபதியான நிலையில் சுவர் கட்டும் நடவடிக்கையில் தீவிரமாக உள்ளார். இதுகுறித்து ஒருதிட்ட அறிக்கைதயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அமெரிக்கா- மெக்சிக்கோ எல்லையில் 1,250 மைல் (2000 கி.மீ.) நீளத்துக்கு இந்தச்சுவர் அமைய உள்ளது. 2020 ஆம் ஆண்டுக்குள் சுவரைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் போது மெக்சிக்கோ எல்லையில் ஒரு லட்சம் கோடி ரூபா செலவில் சுவர் கட்டப்படும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அந்தச்சுவர் கட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், அதைக்கட்டி முடிக்க மூன்றரை வருடங்கள் ஆகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (எ)

# ட்ரம்பின் மேல்முறையீட்டை ஏற்க மறுத்தது நீதிமன்றம்!



வொஷிங்டன், பெப்.11

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பயணத் தடை உத்தரவுக்கு விதிக்கப்பட்ட தடையை, நீக்கக்கோரிய மேல் முறையீட்டு மனுவை அமெரிக்க மேல் முறையீட்டு நீதிமன்றம் ஏற்கமுடியாது என்று மறுத்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், ட்ரம்பின் பயணத் தடை உத்தரவுக்கு நாடு தழுவிய தடை விதித்து, அந்த நாட்டு மாநில நீதிமன்றம் ஒன்று உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ள ட்ரம்ப், இதை எதிர்த்து நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்படும் என்று அறிவித்தார். அதன்படி சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள 9 ஆவது அமெரிக்க மேல் முறையீட்டு நீதிமன்றில் ட்ரம்ப் அரசு முறையீடு செய்தது.

இந்தத் தடை உத்தரவை, நீக்கக்கோரி அளிக்கப்பட்ட மனுவை ஏற்க முடியாது என்று அந்த நீதிமன்றம் அறிவித்துள்ளது.


ஜனாதிபதி ட்ரம்ப் விதித்த தடை உத்தரவை நியாயப்படுத்தும் வகையில், அமெரிக்கா எதிர்கொள்வதாகக் கூறப்படும் தீவிரவாத அச்சுறுத்தலை, அரச தரப்பு நிரூபிக்கவில்லை என்று மேல் முறையீட்டு நீதிமன்ற அமர்வின் 3 நீதிபதிகளும் ஏகமனதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்குள் நுழையும் வெளிநாட்டு மக்களைக் கடுமையாகச் சோதிக்கும்படி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இந்தத் தீர்ப்பால், நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தை எதிர்கொண்டுள்ளது என்றும், இந்த உத்தரவு நடைமுறையைச் சட்ட பூர்வமாக உருவாக்கவுள்ளார் என்றும் தனது சமூக வலைத்தளப் பதிவில் ட்ரம்ப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)



நியூசிலாந்தில் கோல்டன் பே கடற்கரையில் நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள் கரையொதுங்கி உள்ளன. அவற்றில் சுமார் 300 திமிங்கிலங்கள் இறந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. கரையில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட திமிங்கிலங்களைக் கடலுக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியில் தொண்டர் நிறுவன ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை கோல்டன் பே பகுதியில் திமிங்கிலங்கள் கரையொதுங்குவது வழக்கமான ஒன்று. மேலோட்டமாக ஓடும் தண்ணீரால், திமிங்கிலங்கள் கரையொதுங்கிய பின்னர் மீண்டும் கடலின் ஆழமான பகுதிக்குத் திரும்ப அவை சிரமப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

## பிரான்ஸ் அணு உலையில் வெடி விபத்து; கதிர்வீச்சு பாதிப்பு இல்லை எனத் தெரிவிப்பு



பரிஸ், பெப்.11

பிரான்ஸில் அணு உலையில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தால் கதிர்வீச்சு பாதிப்பு ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மேற்குப் பகுதியில் உள்ள பிலேமன்வில் அணு உலையில் இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்தவிபத்தில் ஊழியர்கள் சிலருக்கு இலேசான காயம் ஏற்பட்டது.

இந்த அணு உலையில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கு தொழில்நுட்பக்கோளாறே காரணம் என்று செர்பர்க் சிரேஷ்ட அதிகாரி ஆலிவியர் மார்மியான் கூறியுள்ளார். மேலும் இந்தச் சம்பவம் வெடிவிபத்தே என்றும், இது அணு விபத்து அல்ல என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அணு உலையில் ஏற்பட்ட இந்த வெடி விபத்தால் கதிர்வீச்சு உள்ளிட்ட எந்த விதமான மாசு ஆபத்தும் கிடையாது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## அகதிகள் முகாமை மூடவேண்டாம் கென்ய அரசுக்கு உத்தரவு

கென்யாவிலுள்ள மிகப் பெரிய புகலிடக் கோரிக்கையாளர் முகாமை மூட வேண்டாம் என்று கென்ய அரசுக்கு மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய அகதி முகாம் தொகுதியாக டடாப் முகாம் காணப்படுகின்றது. போர்காரணமாகச் சோமாலியாவிலிருந்து தப்பிவந்த 2 இலட்சம் புகலிடக் கோரிக்கையாளர்கள் அந்தப் பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்த அகதி முகாமை மூடுவதற்கு அரசு எடுத்த தீர்மானம் ஏற்புடையதல்ல. எனவே முகாம்களை மூட முடியாது என்று மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (எ)

# இரகசிய அணு ஆயுத நகரத்தை உருவாக்குகின்றதாம் இந்தியா

### அலறுகிறது பாகிஸ்தான்

இஸ்லாமபாத், பெப்.11

இந்தியா இரகசிய அணு ஆயுத நகரம் ஒன்றை உருவாக்குகின்றது என்று பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தி தொடர்பாளர் நபீஸ் ஷகாரியா கூறியுள்ளார்.

பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தி தொடர்பாளர் நபீஸ் ஷகாரியா வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா இரகசிய அணு ஆயுத நகரம் உருவாக்கி வருகிறது. அதன்மூலம் அணு ஆயுதங்களைத் திரட்டிச் சேகரித்து வைத்துள்ளது. இதனால் இந்தப் பிராந்தியத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைகளை இந்தியா பரிசோதித்துள்ளது. இதுவும் அந்தப் பகுதியில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தியுள்ளது. இதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த இந்தியா மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்துள்ளது. மேலும் அமைதி நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிக்கு இந்தியா பரஸ்பர ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் நல்லுறவையும், அமைதியையும் மட்டுமே பாகிஸ்தான் விரும்புகிறது. பேச்சு மூலம் பிரச்சினையைத் தீர்க்கவே பாகிஸ்தான் விளைகிறது. அதை விடுத்து இந்தியா பகைமை உணர்வுடன் செயற்படுகிறது.-என்றார். (எ)

## இஸ்ரேல் விடுதிமீதான தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பேற்பு

இஸ்ரேல் விடுதி ஒன்றின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர்.

இஸ்ரேலின் செங்கடல் பகுதியில், அமைந்துள்ள விடுதி ஒன்றின் மீதே அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக்குதலில் உயிர்ச் சேதங்களோ, விடுதிக்கோ சேதம் ஏற்படவில்லை. இந்தநிலையில் ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புடன் தொடர்பு பேணும் குழு ஒன்றே ரொக்கட் மூலம் இந்தத் தாக்குதலை நடத்தியது என ஒப்புக் கொண்டுள்ளது. (எ)

# தமிழ் மக்களுக்கு புதிய தலைமை அவசியம்

## 'எழுக தமிழ்' நிகழ்வில் முன்னாள் எம்.பி.சுரேஷ்



நாற்பது வருடங்களுக்கும் மேலாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு எல்லாவற்றையும் இழந்தும் இன்றும் கூடப் போராடிக் கொண்டிருக்கிறோம். மக்களுக்குச் சரியான புதிய தலைமை அவசியம்- என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

'எழுக தமிழ்' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பத்து நாள்களுக்கும் மேலாக கேப்பாபிலவு மக்கள் தங்களது காணிகளை விடுவிப்பதற்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் எங்களுடைய தலைமைகள் எல்லாம் எங்கே போயின? தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். அதற்கு அவர்களது உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மொழிக்காக தமிழர் நடத்துவதே 'எழுக தமிழ்' போராட்டமாகும்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு,பெப்.11

நாட்டில் இடம்பெறும் அனைத்து போராட்டங்களுக்கும் எழுச்சிக்கும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர்களே முன்னின்று செயற்படுகிறார்கள். இது ஆயுதப் போராட்டம் அல்ல. மக்கள் தமிழ் மொழிக்காக நடத்தும் அஹிம்சைப் போராட்டம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

மட்டு. நகரில் நடந்த 'எழுக தமிழ்' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய உணர்விலே மிகவும் அக்கறை கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு திகழ்கின்றது.

நாட்டில் மிக முக்கிய போராட்டங்கள் கிழக்கில் இருந்தே வடக்குக்குப் பரவுகின்றன.

அன்று தந்தை செல்வா தலைமையில் எவ்வாறான தொரு சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றதோ அதனைப் போலவே மிக முக்கிய போராட்டமாக இந்த 'எழுக தமிழ்'பேரணி அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மண்டூரில் யானைகள் அட்டகாசம்

அம்பாறை பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட போரதீவுப்பற்று மண்டூர் கண்ணன் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற யானைகளின் அட்டகாசத்தால் பாடசாலையின் களஞ்சியசாலை சேதமாக்கப்பட்டுள்ளது.இது மாத்திரமன்றி அறுவடை நேரத்தில் நெல் வயல், சோளம், கச்சான் போன்ற பயிர்களையும் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் யானைகள் நாசம் செய்கின்றமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தமிழ் மக்களுடைய ஒற்றுமையை உலகறியச் செய்யவே 'எழுக தமிழ்'

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் தெரிவிப்பு



ஒற்றையாட்சி அடிப்படையில் அரசாங்கம் புதிய அரசமைப்பை முன்வைக்கவுள்ளது. இதற்கு தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என அரசு சர்வதேச ரீதியில் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில் தமிழ் மக்களின் ஒற்றுமையின் பலத்தை உலகறிய செய்யவேண்டும் என்பதற்காவே 'எழுக தமிழ்' பேரணி இடம் பெறுகிறது. -இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற எழுகதமிழ் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எவரும் எவருக்கும் வாக்கு கேட்கவில்லை . இது தேர்தல் களம் அல்ல .அதனை நீங்கள் சரியான கோணத்தில் விளங்கிக் கொள்ளவேண்டும். எமக்கு மென்வலு ஒரு போதும் தீர்வைத் தராது. இது எமக்கு தேவையில்லை.மாறாக மக்கள் வலுவே எமக்குத் தேவை.

தமிழ் தேசத்தின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்த வேண்டும். நமது கலாசார மொழியை பாதுகாக்க வேண்டும்.

சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் வாழ வேண்டுமானால் சமஷ்டி அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டும். அப்போது தான் தமிழர்களால் நிம்மதியாகவும் பாதுகாப்புடனும் வாழ முடியும்.

'எழுக தமிழ்' ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் குரலாக நிரூபிக்கப்படுகின்ற போது அது இனத்துக்கான வெற்றியாக அமையும் . தமிழ் இனத்தின் இருப்பை மக்கள் வலுவுடனே உறுதிப்படுத்த முடியும். இந்தியாவில் சமீபத்தில் நடந்தது போன்று மக்கள் எழுச்சி இலங்கையிலும் ஏற்படும் போது புதிய சகாப்தம் ஒன்று உருவாகும்.

தமிழ்த் தேசத்தின் அடையாளத்தை அழிப்பதை நோக்காகக் கொண்டே அரசு செயற்பட்டு வருகிறது.

ஒற்றையாட்சி முறையிலான புதிய அரசமைப்பையே அரசாங்கம் முன்வைக்கவுள்ளது. இவ்வாறு முன்வைக்கப்படும் அரசமைப்பானது தமிழர்களுக்கான சாவு மணியாகும். -என்றார். (ச)

# நமது வளங்களை சரியாகப் பயன்படுத்தினால் வெளிநாடுகளுக்குச் செல்லத் தேவையில்லை

## மட்டு.அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.11

கடந்த வருடத்தில் கிழக்கு மாகாணத்திலிருந்து சுமார் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் தேடிச் சென்றிருக்கின்றார்கள். மட்டக் களப்பு மனித வளங்கள் உட்பட அத்தனை வளங்களும் நிறைந்த மாவட்டமாகும். இந்த வளங்களை நாங்கள் சரியாகப் பயன்படுத்தினால் வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லத் தேவையில்லை.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சை கிராமத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாச்சியார் பாரம்பரிய உணவகதிறப்புவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெண்கள்தலைமைதாங்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேலோங்கச் செய்வதற்காகத்தான் இவ்வாறான சுயதொழில் திட்டங்களை காவியா நிறுவனத்தினர் இந்த மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுவாக இந்த பாரம்பரிய உணவுகளைச் செய்வதற்குப் புதிதாக திறமையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கின்றவர்கள், சமையலை நன்கு தெரிந்தவர்கள் தங்களது பாரம்பரிய உணவுகளை நன்றாக தயாரிக்கத் தெரிந்தவர்கள். தான். பொருத்தமற்ற உணவுப் பழக்க வழக்கங்களாலேயே மாரடைப்பு, இரத்த அழுத்தம், நீரிழிவு, போன்ற பல்வேறு நோய்கள் உருவாகின்றன.

இங்கே சாதாரணமாக விளைகின்ற பொருள்களுக்கு வெளிநாடுகளில் பெரிய கிராக்கி இருக்கின்றது. ஆனால் அந்தப் பொருள்களுக்கு நம்மவர் மத்தியில் மதிப்பற்ற நிலைதான் காணப்படுகின்றது. எனவே நமது பிரதேசத்தில் இலகுவில் பெறக்கூடிய பொருள்களை நாங்கள் உட்கொள்வதற்கும், அதனை விற்பனை செய்வதற்கும் நாங்கள் பழக்கப்படுத்திக் கொண்டால் வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்ல வேண்டியதில்லை. -என்றார். (ச)

# நாடாளுமன்றில் தனிப்பட்ட கோபங்களை தீர்ப்பது வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகமாகும்

## கிழக்கு முதலமைச்சர் அறிக்கை



மக்கள் பிரச்சினைகளை எடுத்துரைக்க வேண்டிய நாடாளுமன்றத்தின் பெறுமதியான நேரத்தை, தனிப்பட்ட கோபதாபங்களை தீர்த்துக் கொள்ளப் பயன்படுத்துவது தமக்கு வாக்களித்த மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். வீண்பழி சுமத்துவதை நிறுத்தி கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள எமது மாகாண அரசியல்வாதிகள் ஒன்றிணைய வேண்டும் என பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

-இவ்வாறு கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி கிழக்கு முதலமைச்சரால் தடுக்கப்பட்டது என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் அமீர் அலி நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையி லேயே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது பகுதிகளின் அபிவிருத்திகளைத் தடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. கிழக்கு மக்கள் வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பல இன்னல்களை எதிர் கொண்டுவருகின்றனர். இந்த மக்கள் சகல அபிவிருத்திகளையும் பெற்று ஏனைய மாகாண மக்களைப் போன்று நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே எனது ஒரே இலக்கு.

நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினருக்கு உரையாற்றக்கிடைக்கும் நேரம் என்பது மிக மிகப் பெறுமதியானது. அதனை உணர்ந்து அந்த காலப் பகுதிக்குள் தமது பகுதி மக்களின் பிரதான பிரச்சினைகளை எடுத்துரைத்து, அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். -என்றுள்ளது. (ச)

# தனியார் மருத்துவபீடம் கிழக்கிலும் வேண்டும்

## ஜனநாயக மனித உரிமைகள் கட்சி ஸ்தாபகர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.11

கிழக்கு மாகாணத்திலும் தனியார் மருத்துவபீடம் அமைக்கப்பட வேண்டும்.

தனியார் மருத்துவ பீடத்தின் கல்வித் தரத்தை அறிய வேண்டுமானால், இறுதியாண்டில் சகல அரச மற்றும் தனியார் மருத்துவபீட மாணவர்களுக்கும் ஒரு பொதுப் பரீட்சை நடத்தி கல்வித் தரத்தை அறிந்து கொள்ளலாம் எனத் தேசிய ஜனநாயக மனித உரிமைகள் கட்சி ஸ்தாபகர் மொஹிடீன் பாவா தெரிவித்தார்.

தனியார் வைத்தியசாலைகளில் அரசாங்க வைத்தியர்கள் இணைந்து தொழில் புரியும் போது, ஏன் தனியார் வைத்திய பீடங்கள் அமையக் கூடாது? உழைப்பதற்குத் தனியார் மருத்துவமனை வேண்டும். படிப்பதுக்கு தேவை இல்லை என்பது எந்த வகையில் நியாயம்?- என அவர் மேலும் கேள்வி எழுப்பினார். (ச)

# பார்வையற்றோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் இலங்கை அணிக்கு ஆறாவது வெற்றி!



கர்நாடகா, பெப்.11

இந்தியாவில் நடைபெற்று வரும் பார்வையற்றவர்களுக்கான இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி தனது ஆறாவது வெற்றியை நேற்றுமுன் தினம் பதிவு செய்துள்ளது.

கர்நாடகா மாநில கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 12.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.


அணித் தலைவர் சந்தன தேஷப்பிரிய 47 பந்துகளில் 18 பவுண்டறிகளுடன் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களைப் பெற்றார். அவர் ஆரம்ப விக்கெட்டில் தினேஷ் மத்துகமவுடன் 156 ஓட்டங்களைப் பகிர்ந்து இலங்கை அணியின் வெற்றியில் பிரதான பங்காற்றினார். தினேஷ் மத்துகம 38 ஓட்டங்களைப் பெற்றார்.


இந்தத் தொடரில் இலங்கை அணி தனது லீக் போட்டிகளை நிறைவு செய்துள்ளதுடன் அணிகள் நிலையில் மூன்றாவது இடத்தை உறுதிசெய்து கொண்டு அரை இறுதிக்கு முன்னேறியுமுள்ளது.

லீக் ஆட்டங்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 9 ஆட்டத்திலும் வெற்றி பெற்று முதலிடம் பிடித்துள்ளது.

இந்திய அணி 8 வெற்றிகள், ஒரு தோல்வியுடன் 2 ஆவது இடத்திலும், இலங்கை அணி 6 வெற்றிகளும், 2 தோல்விகளுடனும் 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

அரை இறுதிப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. நடைபெறவுள்ள ஓர் அரையிறுதியில், இந்திய அணியை இலங்கை அணி எதிர்த்தாடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)













கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. (க-70)

# யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக எப்.எக்ஸ். அன்ரன் கலந்து சிறப்பித்தார்.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற, விபுலானந்தா, விவேகானந்தா, சர்வானந்தா ஆகிய இல்லங்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. (க-19)









# வவுனியா, சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி!







# பெரும் மாற்றங்களுடன் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக களமிறங்குகிறது இலங்கையின் இருபதுக்கு 20 அணி!

கொழும்பு, பெப்.11

ஆஸ்திரேலிய அணியுட னான மூன்று போட்டிகளை கொண்ட இருபதுக்கு 20 போட்டித் தொடரில் பெரும் மாற்றங்களுடன் இலங்கை அணி களமிறங் கவுள்ளது.

இந்தத் தொடருக்கான இலங்கை அணியின் தலைவராக உபுல் தரங்க தெரிவு செய்யப்பட்டுள் ளார். அதேநேரம் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவும் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் தென்னா பிரிக்க அணியுடனான இறுதி இருபதுக்கு 20 போட்டியை தலைமை ஏற்று வழிநடத்தியிருந்த தினேஷ் சந்திமால் உள்ளடங்கலாக தனஞ்சய டி சில்வா மற்றும் திக்ஷீலா டி சில்வா ஆகியோரும் அணியிலிருந்து நீக்கப் பட்டுள்ளனர்.

அதேநேரம், காயம் கார ணமாக அணியிலிருந்து வெளியேறிய அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸுக்குப் பதிலாக தலைமை பொறுப்பெடுத்து அணியை வழி நடத்தும்



உபுல் தரங்க, முதல் தடவையாக இருபதுக்கு 20 போட்டிகளுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

முழங்கால் மற்றும் டெங்குக் காய்ச்சல் காரண மாக சர்வதேச போட்டிக ளிலிருந்து ஒரு வருட மாக விலகியிருந்த லசித் மலிங்க முழுமையாக குணமடைந்துள்ள நிலையில் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

இறுதியாக, இவர் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரே ஒரு இரு பதுக்கு 20 போட்டியில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து லசித் மலிங்க தெரிவிக்கையில், '' மீண்டும் உடல் தகுதியை பெற்றுக்கொள் வதற்காக நான், கடந்த நான்கு மாதங்களாக குறிப் பிட்ட திட்டதுக்கமைய பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெற வுள்ள பயிற்சிப் போட்டியில் திறமைகளை வெளிப்ப டுத்தி 11 பேர் கொண்ட இலங்கை அணிக்கான இடத்தை தக்க வைத்துக் கொள்ள என்னாலான அனைத்து முயற்சிகளை யும் செய்வேன்''. என் றார்.

அதேநேரம், முன்வரிசை அதிரடி துடுப்பாட்ட வீரர் டில்ஷான் முனவீர, நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தேசிய அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இது வரை நான்கு இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள அவர் மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பிரபல இருபதுக்கு 20 போட்டித் தொடர்களான கரிபியன் பிரிமியர் லீக் மற்றும் பங்களாதேஷ் பிரிமியர் லீக் போட்டிகளில் எதிரணிகளின் பந்து வீச்சை துவம்சம் செய்திருந்தார்.

தென்னாபிரிக்க அணியு டனான சுற்றுப்பயண தெரிவுக்கு தவறியிருந்த நிலையில், சாமர கபுகெதர, மிலிந்த சிறிவர்தன மற்றும் தசுன் சானக்க ஆகியோர் இருபதுக்கு 20 அணியில் அவர்களுக்கான இடத்தை தக்க வைத்துக்கொண்டுள் ளனர்.

அதேநேரம் புது வடிவம் பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணியுடனான இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள், எதிர்வரும் மாதம் 17ஆம் திகதி எம்.சி.ஜி., 19ஆ ம் திகதி கர்டினிய பார்க் ஜீலோங் மற்றும் இறுதி இருபதுக்கு 20 போட்டி 22ஆம் திகதி அடிலெய்டி லும் நடத்துவதற்கு ஒழுங் குகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை இருபதுக்கு 20 அணியின் முழு விவரம் வருமாறு:-

உபுல் தரங்க (அணித் தலைவர்), நிரோஷன் திக்வெல்ல, அசேல குணரத்ன, டில்ஷான் . முனவீர, குசல் மெண்டிஸ், மிலிந்த சிறிவர்தன, சசித் பத்திரன, சாமர கபுகெதற, சீகுகே பிரசன்ன, நுவன் குலசேகர, இசுறு உதான, தசுன் சானக்க, லக்ஷான் சந்தகன், லசித் மலிங்க, விக்கும் சஞ்சய. (க)

---

## பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட்: இரட்டை சதம் அடித்து சாதனை படைத்தார் விராட் கோஹ்லி



ஐதராபாத், பெப்.11

பங்களாதேஷ் அணிக்கு எதிராக இடம்பெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி இரட்டை சதம் அடித்து அசத்தியுள் ளார்.

இதன்மூலம் தொடர்ந்து நான்கு தொடர்களில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனை யையும் படைத்துள்ளார்.

இந்தியாவுக்குச் சென் றுள்ள பங்களாதேஷ் அணி, முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் பங்கேற்கிறது.

ஐதராபாத்தில் நடை பெற்றுவரும் இப்போட்டி யின் முதல் நாளில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கு 356 ஓட்டங்களைக் குவித்தது.

கோஹ்லி (111 ஓட்டங் கள்), ரகானே (45 ஓட்டங் கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் இடம் பெற்றது. சென்னை டெஸ்டில் முச்சதம் அடித்த கருண் நாயருக்குப் பதில், இந்திய அணியில் இம் முறை ரகானே இடம் பெற்றிருந்தார். தனது தேர்வை நியாயப்படுத்தும் வகையில், ரகானே அரைச் சதம் எட்டினார். கோஹ்லி டெஸ்ட் அரங்கில் 5 ஆவது முறையாக 150 ஓட்டங்களை எட்டினார்.

நான்காவது விக்கெட் டுக்கு 222 ஓட்டங்களைச் சேர்த்த போது, ரகானே 83 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். உணவு இடை வேளைக்குப் பின்னர் சிறப்பான துடுப்பாட்டத் தைத் தொடர்ந்த கோஹ்லி, டெஸ்ட் அரங்கில் தனது நான்காவது இரட்டை சதம் அடித்தார். அத்துடன், தொடர்ந்து நான்கு தொடரில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற புதிய சாதனையையும் படைத்தார். இவர் 204 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அஷ்வின் 34 ஓட்டங்களை எடுத்தார்.

இந்திய அணி 166 ஓவர் களில் 6 விக்கெட் இழப் பிற்கு 687 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

சகா 106 ஓட்டங்களை யும், ஜடேஜா 60 ஓட்டங் களையும் எடுத்திருந்தனர். (க)

---

## வரி செலுத்தத் தவறியதால் சானியாவுக்கு அழைப்பாணை!

மும்பை, பெப்.11


இந்திய டென்னிஸ் வீராங் கனை சானியா மிர்ஸா வரி செலுத்தத் தவறியதால் எதிர்வரும் 16 ஆம் திகதி நேரில் அவரை ஆஜராகு மாறு வரித்துறை அழைப் பாணை விடுத்துள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சானியா மிர்ஸா, தெலங்கானா மாநிலத்தின் தூதராக நிய மிக்கப்பட்டார்.

அப்போது தெலுங்கானா அரசின் சார்பில் சானியா வுக்கு 1 கோடி ரூபா வழங் கப்பட்டது. ஆனால், அதற்கான சேவை வரியை சானியா மிர்ஸா இதுவரை செலுத்தாத காரணத்தினா லேயே அவருக்கு அழைப் பாணை விடுக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

---

## தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் பாகிஸ்தான் அணித்தலைவர் அசார் அலி!



இஸ்லாமாபாத், பெப்.11

பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவரான அசார் அலி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை பாகிஸ்தான் 4-1 என்ற கணக்கில் இழந்தது. இது மட்டுமின்றி சமீபகால மாகவே அசார் அலி தலைமையிலான அணி தொடர் தோல்விகளை சந்தித்து வந்ததால் கடும் விமர்சனங்கள் எழுந்தன.

இதனையடுத்து தனது பதவியை அசார் அலி ராஜினாமா செய்துள்ளார். இதனை தொடர்ந்து பாகிஸ்தான் இருபதுக்கு 20 கிரிக்கெட் அணியின் அணித்தலைவரான சர்ப் ராஸ் அஹமது புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்த தகவலை பாகிஸ் தான் கிரிக்கெட் சபை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் ஏற்பாட்டில் – பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன் எழுப்பப்படும் தமிழ்த் தேச இறையாண்மையின் குரலாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ்த்தேசமானது – தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்துக்கும், இலங்கைத்தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் வலியுறுத்துவதே இந்த 'எழுக தமிழ்' பேரணியின் நோக்கமாகும்.

**சிங்களக் குடியேற்றம்**

இலங்கைத் தீவின் வடக்கு – கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் பூர்வீகத்தாயக பூமி ஆகும். மாறி மாறி ஆட்சியமைத்த சிறிலங்கா அரசுகள் – குறிப்பாகக் கிழக்கை இலக்குவைத்து மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினூடாகத் தமிழ் மக்களின் நிலத்தையும், பொருளாதாரத்தையும், பண்பாட்டையும், மொழியையும் அழித்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் உச்சமாக – தமிழர் தேசத்தைச் சிங்கள மயமாக்கி, அதன் அடையாளத்தையும் கூட்டிருப்பையுமே சிதைத்து வருகின்றன. இதுவே தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டுவரும் ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியில் தமிழர் தேசம் காக்கப்பட வேண்டுமாயின், தமிழினத்தின் நிலம், மொழி, பொருளாதாரம், பண்பாடு, அதன் தனித்துவமான அடையாளம் என்பன – ஒட்டுமொத்தமாக – ஒரேயடியாகக் காக்கப்பட வேண்டும் என்பதே இந்தப் பேரணியின் தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் – எமது இனத்தின் சமூக – பொருளாதார – அரசியல் தனித்துவம் காக்கப்பட வேண்டுமாயின், கிழக்கின் தமிழர்களாகிய நாம், எம்மிலிருந்து வடக்கு பிரிக்கப்படாதவாறான சுயாட்சியலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், இந்த நிலைப்பாடு எந்தவித விட்டுக் கொடுப்புக்கும் அப்பாற்பட்டது என்பதனையும் மட்டக்களப்பில் நடைபெறும் இந்த 'எழுகதமிழ்' பேரணியின் ஊடாக குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் பிரகடனப் படுத்துகின்றோம்.

மேலதிகமாக வடக்கில் – யாழ்ப்பாணத்தில் – 2016ஆம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 24ஆம் நாள் முன்னெடுக்கப்பட்ட 'எழுக தமிழ்' பேரணியின் போது பல்லாயிரம் தமிழ் மக்கள் திரண்டு மேற்கொண்ட கீழ் வரும் பிரகடனத்தினை – அதன் ஒவ்வொரு அம்சங்களையும் – அவற்றின் அதே அரசியல் அர்த்தங்களோடு – இந்த பேரணி மீளவும் வலியுறுத்துகின்றது.

**பௌத்த மயமாக்கல்**

1. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை வலிந்து பௌத்த சிங்கள மயமாக்கும் நோக்குடன் சிங்களக் குடியேற்றங்களும், பௌத்த விகாரைகளும், புத்தர் சிலைகளும் இவ்வாட்சியிலும் அரசின் அனுசரணையுடனும், இராணுவத்தின் உதவியுடனும் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களுடைய இன அடையாளத்தை அழிக்கவும், வட கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களின் குடிப்பரம்பலை வலிந்து மாற்றவும் அரசு எடுத்து வரும் இவ்வாறான சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு இம் மக்கள் பேரணி வலியுறுத்துகின்றது.

**இராணுவ மயம்**

2. யுத்தம் நிறைவடைந்து ஏழு வருடங்கள் ஆகிய நிலையிலும் இராணுவம் மிகச் செறிவாக வடகிழக்கில் குவிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவம் தமிழர் தாயகப்பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியைச் சுவீகரிப்பு செய்தது மாத்திரமல்லாமல் [illegible] களின் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது. மேலும் உல்லாச விடுதிகள், விவசாய பண்ணைகள், இதர வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதுடன், வடக்குகிழக்கு நிர்வாகத்திலும் தொடர்ந்தும் தலையிட்டு வருகின்றது. வட கிழக்கு தமிழர்தாயக பிரதேசங்களில் தமிழர் தமது வாழ் வாதாரத்துக்காகத் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு இராணுவத்தில் தங்கி தமது பொருளாதாரத்தை தாமே பொறுப்பேற்க முடியாத நிலையையும், இராணுவ மயமாக்கலினூடு தமிழ் சமூகத்தினை பிளவுபடுத்தி, சமூக உறவு முறைகளை சிதைத்து, தமிழர் கூட்டாக சனநாயக ரீதியில் அணி திரள்வதற்கு இடையூறாகவும் இராணுவம் நிலவி வருகிறது. பெண்கள், சிறுவர்களுக் கெதிரான இராணுவத்தினரின் பாலியல் வன்முறைச் சம்பவங்களும் தமிழ்த் தேசத்தின் இருப்பை சிதைக்கும் வழி வகைகளே. இதனால் வட–கிழக்குத்தாயகத்திலிருந்து உடனடியாக இராணுவத்தைவெளியேற்றுமாறு இப்பேரணிவலியுறுத்துகின்றது.

**நீதி தேடல்**

3. தமிழ் இனப் படுகொலைக்கான நீதித் தேடலில் – உள்ளகப் பொறி முறை பயனற்ற – சாத்தியமற்ற – ஒன்று எனத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றனர். ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் செப்ரெம்பர் 2015 அறிக்கை மிகத்தெளிவாக இலங்கையின் நீதித்துறை யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்கத் தகமையற்றது எனக் கூறியது. இருப்பினும் ஐ.நாவின் அங்கத்துவநாடுகள் இணைந்து கலப்புபொறிமுறை ஒன்றை இலங்கைக்கு பொருத்தமானது என தமது செப்ரெம்பர் 2015 பிரேரணை மூலமவி தந்துரைத்தன. அதனை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட இலங்கை அரசாங்கம் தற்போது வெளிநாட்டுநீதிபதிகளை உள்ளடக்க முடியாது எனத் தெளிவாக அறிவித்துவிட்டது. கலப்பு பொறிமுறையை நிராகரித்து மீள உள்ளகப் பொறிமுறையை மட்டுமே முன்வைக்கின்றது. அத்தோடு, அதனைச் செய்வதற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை மேலும் நீடித்துத்தருமாறும் தற்போது கோரி நிற்கின்றது. இந்தப் பின்னணியில், சிறீலங்கா அரசுக்கு எத்தகைய கால நீடிப்பும் வழங்கப்படக் கூடாது என வலியுறுத்துவதோடு, தமிழ் இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணையையே மட்டுமே தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப்பாடாக இந்தப் பேரணி வலியுறுத்தி நிற்கின்றது.

4. கடந்த 35 வருடங்களுக்கு மேலாக நிலவி வரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் சிலர் 15, 20 வருடங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர். 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு உறுதிமொழி கொடுத்தும் இதுவரை பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை என்பதுடன் தொடர்ந்தும் பல இளைஞர்கள் அச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் வாழும் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பதுடன் பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக விலக்கிக்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பேரணி வலியுறுத்துகின்றது.

5. போர் நிகழ்ந்த காலகட்டத்திலும், அரசியற் காரணங்களுக்காக கடத்தப்பட்டும், சரணடைந்த பின்பும் காணாமல் போகச்செய்யப்பட்ட ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் எங்கு இருக்கின்றார்கள், அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என உடனடியாகக் கண்டறிந்து பகிரங்கப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கு நீதி வழங்கப்படவும் வேண்டும்.

**மீனவர் பாதிப்பு**

6. யுத்தம் நடந்த கால கட்டங்களில் கடற்படையினரின் தடை உத்தரவு காரணமாக வடக்கு கிழக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்திருந்தனர். ஆனால் யுத்தம் நிறைவடைந்து ஏழுவருடங்கள் ஆகிய நிலையில், இன்றும் கூட வடக்கு கிழக்கு மீனவர்கள் தொடர்ச்சியான பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். தென்னிலங்கை மீனவர்கள் வட கிழக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவது மாத்திரமின்றி, வடக்கு, கிழக்கு மீனவர்களின் படகுகளைச் சட்டவிரோதமாக கைப்பற்றுவதாலும், நிரந்தர தங்குமிடங்களை அத்துமீறி அமைப்பதனாலும் தமிழ் மீனவர்கள் தமது சொந்த மீன்பிடி இடங்களில் இருந்தே விரட்டப்படுகின்ற சூழல் உருவாகி வருகின்றது.. மேலும் தென்னிலங்கை மீனவர்கள், வட கிழக்கு கடற்பிரதேசங்களில் சட்டவிரோதமான மீன்பிடி முறைகளைக் கையாள்வதால் தமிழ் மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்தும் வருகின்றார்கள். இதன் காரணமாக ஒட்டு மொத்தமான தமிழ் மக்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பேரணி வலியுறுத்துகின்றது.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகளாலும் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடத் தொழில் செய்து பிழைக்கும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுடன், தமிழ் மீனவர்களின் கடல் வளங்கள் அத்துமீறி, சட்டத்துக்கு புறம்பாக சூறையாடப்படுவதை இப்பேரணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

**போதைப் பிரயோகம்**

7. விடுதலைக்காக போராடிய தேசிய இனங்கள் மத்தியில் அவர்களின் விடுதலை வேட்கையை அழிக்கும் பொருட்டு போதை வஸ்துக்களை இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் பரப்பும் வழிமுறைகளைப் பல நாடுகளின் அரசுகள் கையாண்டுள்ளன. தமிழர் தாயகத்தை ஆழமான இராணுவ கண்காணிப்புக்குள் வைத்திருக்கின்ற போதிலும் பெருமளவான போதை வஸ்துப் பொருள்கள் எமது பிரதேசங்களினுள் ஊடுருவ விடப்படுகின்றன. மேலும், கிரோயின் போன்ற போதைப் பொருள்களும், வடக்குகிழக்கில் வேகமாகப் பரவிவருவதுடன், வட – கிழக்கில் இராணுவத்தினால் நடத்தப்படும் விளையாட்டு விழாக்களின் போது தமிழ் இளைஞர்களிடையே மது பாவனையை இராணுவம் நேரடியாக ஊக்கப்படுத்துவது ஆவணப் படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இவை அனைத்தும் எமது இளம் சந்ததியின் எதிர்காலத்தை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளாகவே நோக்க வேண்டியுள்ளது. இவற்றை நிறுத்தவும், கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என இப்பேரணி வலியுறுத்துகின்றது.

**அரசியல் தீர்வு**

அரசியல் தீர்வு சம்பந்தமாக:–

இன்னமும் தீர்வு காணப்படாத தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையினதும், நடந்து முடிந்த போரினதும் – நேரடிமற்றும் நேரடியற்ற விளைவுகளான – மேற்கூறப்பட்ட அரசியற் – பாதகங்கள் எதுவும் மீண்டும் நிகழாதவாறு தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியற் தீர்வு முன்மொழிவின் அடிப்படையில் ஒரு சுயாட்சித் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தப் பேரணி பிரகடனம் செய்கின்றது.

**புதிய அரசமைப்பு**

தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனும் நோக்கில் 3ஆவது குடியரசு அரசியல் யாப்பை கொண்டு வருவோம் என்று இவ்வரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு கூறி வருகின்றது. ஆனால் இலங்கை அரசின் ஜனாதிபதியும், பிரதமரும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு வரும் எனவும் பௌத்தத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமையில் மாற்றம் வராது எனவும் தொடர்ந்தேர்ச்சியாக கூறிவருகின்றனர். ஒற்றையாட்சிக்குள் ஒரு குறைந்த பட்ச அதிகாரப் பகிர்வை தமிழருக்கான தீர்வாகத் திணிக்க இவ் வரசாங்கம் முயற்சிக்கின்றது. அவசர அவசரமாக ஓர் அரசமைப்பை நாடாளுமன்றில் நிறைவேற்றி பொது சன வாக் கெடுப்பு ஒன்றின் மூலம் புதிய அரசமைப்பு ஒன்றிற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற அரசாங்கம் முயற்சிக்கின்றது. தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் வாக்கு புதிய அரசமைப்பிற்கு கிடைத்தால் அதை வைத்து தமிழ் மக்களிற்கு அரசியல் தீர்வொன்றை வழங்கிவிட்டதாக அர்த்தப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

புதிய அரசமைப்பு தமிழ் மக்களின் அபிலாசைகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. தமிழர்கள் புதிய அரசியலமைப்பு எப்படியாக இருக்க வேண்டும் எனக் கருத்துக்கூறுவதோ, கூட்டாக நிலைப்பாடு எடுப்பதோ, அதுதொடர்பில் சனநாயக ரீதியாக அணிதிரள்வதோ அரசமைப்பாக்க முயற்சியை குழப்ப எடுக்கும் நடவடிக்கையாக சித்திரிப்பதை நாம் கண்டிக்கின்றோம். அந்தவகையில் பின்வரும் நிலைப்பாடுகளை இப்பேரணி எடுக்கின்றது:

**ஒற்றையாட்சியில் தீர்வு இல்லை**

அ. தற்போதைய அரசமைப்பின் 13ஆம் திருத்தம் எமக்கு தந்த படிப்பினையின் அடிப்படையிலும், இலங்கை அரசியலின் சிங்கள, பௌத்தமேலாதிக்க அரசியல் கலாசாரத்தில் தமிழர்களின் கடந்த 68 ஆண்டு கால கூட்டனு பவத்தின் பிரகாரமும் ஒற்றை யாட்சிக்குள் அரசியல் தீர்வு எந்த வடிவத்திலும் சாத்தியம் இல்லை என நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

ஆ. தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில், தேசிய இனப்பிரச்சினைக்கான நடைமுறை சாத்தியமான தீர்வு, தமிழர்களை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஒரு தேசமாக, அவர்களது சுயநிர்ணய உரிமையைமதிக்கும், தன்னளவில் இறைமை கொண்ட சுயாட்சி ஒன்றை நிறுவும் அரசமைப்பு ஏற்பாடுகள் மூலமாகவே அடையப்படும் எனக் கூறுகின்றோம்.

**சமஷ்டி மூலம் சுயாட்சி**

இ. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த் தேசத்தின் இறைமையையும், நிறுவனரீதியாக, சமஷ்டி முறைமை ஒன்றின் மூலமாக அடைந்து கொள்ளலாம் என நாம் கூறுகின்றோம்.

ஈ. தமிழர் தேசத்தின் தனித்துவத்தையோ, தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ அங்கீகரிக்காத, உள்ளடக்கத்தில் தெளிவில்லாத அரைகுறைத் தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள முடியாது என இப்பேரணி கூறுகின்றது.

உ. புதிய அரசமைப்பு மிகவும் இரகசியமான முறையில் உருவாக்கப்படுகின்றது. புதிய அரசமைப்பு தொடர்பிலாக நடத்தப்பட்ட பொது மக்கள் கலந்தாய்வு தொடர்பிலான அறிக்கை தமிழ் மக்களின் முன் வைப்புக்களை புறந்தள்ளியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பு நகல் தொடர்பிலான மக்கள் வாக்கெடுப்பிற்கு முன்னர் வெளிப்படையானதும், சனநாயக ரீதியதுமான கலந்துரையாடல் ஒன்று மக்கள் மத்தியில் இடம்பெற போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அடக்குமுறையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடலை நடத்த முடியாது. வடக்கு, கிழக்கில் கருத்துச் சுதந்திரத்துடன் புதிய அரசமைப்பு தொடர்பிலான திறந்த விவாதம் நடைபெற பயங்கரவாதத்தடை சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும், இராணுவமய நீக்கம் செய்யப்பட வேண்டும் என நாம் கூறுகின்றோம். தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில், தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்தது. அதன் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அடையப்பட வேண்டும் என இந்தப்பேரணி பிரகடனப்படுத்துகின்றது.

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய பின்னர் கிழக்கின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கில் மக்கள் ஒன்றுகூடினர். அவர்கள் அங்கிருந்து மட்டக்களப்பு நாவற்குடா விபுலானந்தா விளையாட்டுக் கழகத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள், வடக்கு – கிழக்கு இணைக்கப்பட வேண்டும், சமஷ்டி அடிப்படையில் தீர்வு வேண்டும், போர்க் குற்றத்திற்கு சர்வதேச விசாரணை வேண்டும், தமிழர் தாயகத்தில் இருந்து படையினரை வெளியேற்ற வேண்டும், பௌத்த விகாரைகள் அமைக்காதே, திட்டமிட்ட குடியேற்றங்களை உடனே நிறுத்து, காணாமற்போனவர்களுக்கு உடனே பதில் கூறு, அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய் – போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பிக்கொண்டு சென்றனர்.

இந்தப் பேரணியில், பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என்ற வேறுபாடுகள் இன்றி பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், மதகுருமார், அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பேரணி நாவற்குடா விபுலானந்தா விளையாட்டுக்கழகத்தை சென்றடைந்ததும் அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட அரங்கில் எழுக தமிழ் எழுச்சிக் கூட்டம் ஆரம்பமானது. அங்கவீனமடைந்த முன்னாள் போராளி ஒருவர் பொதுச் சுடர் ஏற்றினார். பின்னர் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான ரி.வசந்தராஜா எழுக தமிழ் எழுச்சிப் பிரகடனத்தை வாசித்தார்.

தொடர்ந்து அரசியல் கட்சிகளின் சார்பில் கலந்துகொண்ட பிரமுகர்களின் உரைகள் இடம் பெற்றன. விசேடமாக பேரவையின் இணைத் தலைவரும் வடக்கு முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் சுமார் 30 நிமிட நேரம் உரையாற்றினார்.

நேற்றைய பேரணியிலும் எழுச்சிக் கூட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாழேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவசக்தி ஆனந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சித் தலைவருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் பொதுச் செயலாளருமான செ.கஜேந்திரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரட்ணம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், விந்தன் கனகரட்ணம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம)

காலைக்கதிர்



# மட்டு நகரில் நடந்த 'எழுக தமிழ்' நிகழ்வு


























## அரிசி விலை நிர்ணயம்

கொழும்பு, பெப்.11

மூன்று அரிசி வகைகளுக்கான அதிகூடிய சில்லறை விலைகளை அரசாங்கம் நிர்ணயத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் நாட்டு அரிசி ஒரு கிலோ 72 ரூபாவாகவும், அவிக்கப்படாத பச்சை அரிசி ஒரு கிலோ 70 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 81 ரூபாவாகவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் விற்பனை செய்ய வேண்டும்.

மேற்கண்ட விலைகளுக்கு அதிகமாக மேற்கண்ட அரிசி வகைகள் விற்கப்பட்டால் நீதிமன்றம் ஊடாக வழக்குத் தொடரப்பட்டு தண்டனை விதிக்கப்டும் என்று வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் அறிவித்துள்ளார்.

கீரிச் சம்பா மற்றும் சுகுறுச் சம்பா அரிசி வகைகள் இரண்டுக்கும் மேற்படி விலைகளில் இருந்து விலைக்கு அளிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## வவுனியாவில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து ஒன்றிணைந்த சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் வவுனியா மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கேப்பாபில்வு, பிலக்குடியிருப்பு மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்துக்காக காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாபிலவு விமானப்படைத் தளத்துக்கு முன்பாக அமர்ந்துபதினோராவது நாளாக தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் வவுனியாவிலும் கவனயீர்ப்பு நடத்தப்பட்டுள்ளது. (ஐ-81)

## கிணற்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்பு!

சரசாலை, பெப்.11

சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சில வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. அங்கு மேலதிகமாகவும் வெடிபொருட்கள் இருக்கலாம் என நம்பப்படுவதனால் அக்கிணறு இன்றைய தினம் விசேட அதிரடிப்படையினரால் சோதனையிடப்படவுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மேற்படி பகுதியில் உள்ள பராமரிப்பின்றி இருந்த கிணறு ஒன்றை இறைத்தபோது அதற்குள் சில வெடிபொருட்கள் காணப்பட்டன. இதனையடுத்து சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களும் விசேட அதிரடிப்படையினரும் அங்கு சென்று கிணற்றில் இருந்து வெளியில் எடுக்கப்பட்ட மண்ணை சோதனையிட்டனர்.

இதன்போது கைக்குண்டுகள் - 04, மிதிவெடி - 01, ஷெல் - 01 என்பன மீட்கப்பட்டன. அவற்றை விசேட அதிரடிப்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். (ம-40)






[illegible] 11.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.